Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(சி-648)
(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 05 (09.03.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :157

# இந்திய மீனவர் நுழைய கடற்படையே காரணம்!

## செல்வம் அடைக்கலநாதன் பிரதமருக்குக் கடிதம்

(கொழும்பு)

**தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையில் மோதல் ஏற்பட இலங்கைக் கடற்படையே காரணம் என, தமிழ்க் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமருக்கு நேற்று அனுப் பிய கடிதத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

மன்னார் மீனவர்களுக்கும் இந் திய மீனவர்களுக்குமிடையே மோதல் ஏற்படுத்தும் வகையில், இந்திய மீன வர்களை இலங்கைக் கடல் எல் லைக்குள் வரக் கடற்படையினரே அனு மதிக்கின்றனர். போர்க்காலங்களில் உள்ளூர் மீனவர்களுக்கு கடும் கட் டுப்பாடுகள் விதித்த கடற்படை, இந் திய மீனவர்கள் எல்லை கடந்து வந்து இலங்கைக் கடலில் மீன் பிடிப்பதைக் கண்டும் காணாதுவிட்ட னர்.

இந்திய மீன்பிடிப் படகுகள் இலங்கை கடல் எல்லைக்குள் வரு வதை கடற்படை தடுக்கவில்லை. இவர்களால் தடுக்கமுடியாவிட்டால் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் வருவதை கண்கா ணிக்க, போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவை அனுமதிக்க வேண்டும் எனத் தனது கடிதத்தில் செல்வம் பிரதமரைக் கோரியுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் கண் காணிபுக் குழுவுக்கும் மன்னார் அரச அதிபருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## அக்குரஸ்ஸவில் பொ.ஐ.மு. முன்னணியில்

அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு நேற்று நடந்த தேர்தலில் - நேற்று நள்ளிரவு வரை கணக்கிடப்பட்ட தபால்மூல வாக்குகளில், பொது ஜன ஐக்கிய முன்னணி, முதலிடம் வகித்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி 232 வாக்குகளும், ஜே.வி.பி. 151 வாக்குகளும், சிங்ஹல மஹா சம்மத

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களுக்கு தனிக்குழு தீர்மானிப்பது நோர்வேயல்லவாம்

பேச்சுக்களில் முஸ்லிம் தரப் பில் தனிக்குழு பங்குபற்றுவதா இல்லையா என்பதையும், அதற் கான தேவைபற்றியும் முடிவு செய் யவேண்டியது விடுதலைப் புலிக ளும் அரசாங்கமும்தான். நோர்வே இதில் கருத்துக்கூறுவதற்கு ஒன்று மில்லையென, நோர்வேயின் சமாதா னத தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 6 போராளிகள் விடுதலையாவர்?

(கொழும்பு)

திருமலைக் கடற்பரப்பில் வைத் துக் கைதான ஆறு விடுதலைப் புலி கள் இயக்கப் போராளிகளும் நாளை பிணையில் விடுதலை செய்யப்பட லாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவர்களின் பிணைமனு மீதான விசாரணை நாளை உயர்நீதிமன் றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது இவர்களுக்கு பிணை வழங்குவதற்கு, சட்டமா அதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தானே!

# தமது நிலைமையை விளக்கி கைதிகள் ரணிலுக்கு கடிதம்

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் சிறைக்கைதிகள், தமது கோரிக்கைகளை வலியுறுத்தி பிரதம மந்திரி ரணிலுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகளூடாக அனுப்பப்பட்டிருக்கும் இக்கடிதத்தில், தமது கோரிக்கைகள் குறித்தும், இப்போராட்டத்தினால் ஏற்பட்டிருக்கும் கைதிகளின் தற்போதைய உடல்நிலை தொடர்பாகவும் எடுத்துக் கூறப் பட்டிருக்கிறது.

நேற்றைய நிலவரத்தின்படி 35 கைதிகள் மிகவும் கவலைக்கிடமான நிலையிலும், 20 பேர் இரத்தவாந்தி எடுக்கும் நிலையிலும் உள்ளனர். மேலும் நான்குபேர் மயக்கமுற்ற நிலையிலும் உள்ளனர். இந்த விபரங் களும் பிரதமருக்கு அனுபபிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன. (01)

# தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவாக செயலகம் முன் நாளை மறியல்!

## ஒருமணிநேர போராட்டத்திற்கு கூட்டமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வாரமாக களுத்து றைச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்திவரும் தமிழ் உறவுகளுக்கு ஆதரவு தெரிவித்து நாளை காலை யாழ். செயலகம் முன் மறியற்போராட்டம் நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணிமுதல் ஒரு மணிநேரம் இந்த மறியற்போராட் டம் நடாத்தப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. தமிழ்க் கூட்டமைப்பி னரும் பொது அமைப்புக்களின் ஒன் றியமும் இந்த மறியற்போராட் டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளன. இந்த மறியல் போராட்டம் தொடர் பாக - மாவை சேனாதிராஜா, கஜேந் திரகுமார், எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கூட்டாக கையெழுத்திட்டு வெளியிட் டுள்ள அறிக்கையில்,

தமிழ்க் கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகால மாக தெற்குச் சிறைகளில் வாடுகின் றனர். அரசு, சட்டத்துறை, ஜனாதி பதி, மதத்தலைவர்கள், மனிதாபி மான அமைப்புக்கள் என பல தரப் பினரிடமும் இக்கைதிகள் விடுதலை தொடர்பாக எடுத்துக் கூறியும் இது வரை எந்த பலனுமில்லை.

நாட்டின் ஆட்சியைக் கவிழ்க்க முயன்ற ஜே.வி.பி. உறுப்பினர்களே விடுதலை செய்யப்பட்டுவிட்ட நிலை யில், தமிழ்க் கைதிகளை விடுவிக்க அரசு மறுக்கின்றது. சமாதானச் சூழ் நிலை ஏற்பட்டு ஒரு வருடமாகியும் - பெண்கள் உட்பட தமிழ்க் கைதிகள் விடுவிக்கப்படாதிருக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# களுத்துறை சிறைக்கு மன்னார் ஆயர் விஜயம்

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் சிறைக் கைதிகளை மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் நேற்றுச் சந்தித்தார்.

உண்ணாவிரதிகளுடன் அவர் கலந்துரையாடியபோது, தமது வழக் குகளை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்றும், அந்த வழக்கு கள் வடக்கு - கிழக்கில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றப்படவேண் டும் என்றும் அவர்கள் தெரிவித்த தாக ஆயர் மேலும் கூறினார்.

# தொண்டராசிரியர் நியமனம் நிதியின்மையால் நிறுத்தம்!

வட - கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதை இடைநிறுத்தி வைக்கும்படி அரசு உத்தர விட்டுளளது.

மேற்படி பகுதிகளில் கடமையில் இருக்கும் சுமார் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு வட - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எனினும், மாகாணக் கல்வி அமைச்சுக்கு இவ்விடயம் குறித்து இறுதியா கக் கிடைத்த அறிவித்தலின்படி - மேற்படி நியமனங்களை இடைநிறுத்தி வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மேற்படி நியமனம் வழங்குவதற்கு நிதி ஏற்பாடுகள் எதுவும் தற்போது இல்லை என்றும், நிதி ஏற்பாடுகள் கிடைக்கும்வரை இந்த நியமனங்களை இடைநிறுத்தும்படியும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# இறுதிவரை காத்திராமல் நிதியுதவியை வழங்குக!

## ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர்



இறுதித்தீர்வு வரும்வரை காத்திராமல் உடனடியாகவே நிதியுதவிகளை இலங்கைக்கு வழங்குமாறு, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக வங்கியின் தலைவர் ட்ரேடோ சினோ தெரிவித்தார்.

தனது இலங்கை விஜயம் தொடர்பாக விளக்குவதற்காக வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான மாநாடு ஒன்றை, கொழும்பு ஹில்டன் ஹோட் டேலில் நேற்றுக் காலை அவர் நடத்தினார்.

அங்கு விளக்கமளித்த அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்க மும் விடுதலைப் புலிகளும் பரஸ்பர நம்பிக்கையோடு பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றனர் என்றார். எனவே, இறுதித்தீர்வு எட்டப்படும் வரை சர்வதேச நாடுகள் உதவி வழங்குவதற்குக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. நிதியுதவிகள் உடனடியாகவே வழங்கப்பட வேண்டும். போரினால் பாதிக் கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிக்கு கூடுதலான நிதியுதவிகள் அவசியம் தேவைப்படுகின்றன என்று கூறிய அவர், சர்வதேச நாடுகள் உடனடியாக உதவி வழங்குவது குறித்துப் பரிசீலிக்கவேண்டும் என்றார்.

*(முன்வந்த செய்தி உள்ளே)*

# பல கோரிக்கைகளை முன்வைத்து செவ்வாயன்று ஆசிரியர் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழர் ஆசிரியர் சங் கத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்களின் ஒருநாள் அடையாள வேலை நிறுத் தமும், அமைதிப் பேரணியும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடை பெறவுள்ளன. பல கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடை பெறுகிறது.

வடக்கு - கிழக்கில் சேவையாற் றும் தொண்டர் ஆசிரியர்களில் ஆயி ரம் பேருக்கு உடனடியாக நியமனம் வழங்க வேண்டும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
(சி-626) 021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.









விடுதலைப் புலிகளின் 'நிதர்சனம்' மகளிர் பிரிவினரால் தயாரிக்கப்பட்ட 'உப்பில் உறைந்த உதிரங்கள்' வீடியோ திரைப்பட வெளியீட்டு விழாவில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றுவதை முதலாவது படத்திலும், மதிப்பீட்டுரையை திரைப்பட விமர்சகர் அ.யேசுராசா நிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும், இந்நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சந்திரமோகன்)

# கச்சதீவு உற்சவத்துக்கு தமிழக மீனவர் இல்லை

கச்சதீவு புனித அந்தோனியர் ஆலய உற்சவத்தில் இராமேஸ்வரம் மீனவர்கள் கலந்துகொள்வதற்கு அதிகாரிகள் அனுமதி அளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்களின் படகுகள் இலங்கையில் தடுத்துவைக்கப் பட்டிருக்கும் இந்த நேரத்தில், இராமேஸ்வரப் பகுதி மீனவர்கள் அங்கு செல்வது உசிதமல்ல என்பதாலேயே, அதிகாரிகள் அனுமதி மறுத்துள்ளனர்.

கச்சதீவு ஒப்பந்தத்தின்படி இந்தத் திருவிழாவில் இரு நாடுகளின் மீனவர்களும் பங்கேற்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'உப்பில் உறைந்த உதிரங்கள்' நேற்று வெளியிடப்பட்டது!

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட 'உப்பில் உறைந்த உதிரங்கள்' முழு நீளத் திரைப்படத்தின் வெளியீட்டு விழா, நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது. சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற, இந்த நிதர்சனத்தின் சிறப்பு வெளியீட்டு விழா, பல்கலைக்கழக விரிவுரையாளர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

திரைப்படத்தின் முதல் பிரதியை மகளிர் பிரிவைச் சேர்ந்த ஜமுனா, முகாமைத்துவ விரிவுரையாளர் திருமதி சிவாஸ்கா நாதனிடம் வழங்கினார்.

மதிப்பீட்டுரையை திரைப்பட விமர்சகர் அ.யேசுராசா நிகழ்த்தினார்.இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் பொதுஅமைப்புக்களின் தலைவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், சமயத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ச)

# சமாதான நடவடிக்கைகளில் புலிகள் பூரண நம்பிக்கை

## ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் கொழும்பில் தெரிவிப்பு

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் காண்பித்து வரும் மனப்பூர்வமான, நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கையையிட்டு நாம் திருப்தி அடைந்துள்ளோம் - இவ்வாறு ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

சமாதான நடவடிக்கைகளின் காரணமாக அடைந்துள்ள பொருளாதார நன்மைகளே, எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றி அடைவதற்கு வழிவகுக்கும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கான உதவியை அதிகரிக்குமா என்பது பற்றி இப்போது அறிவிக்க முடியாது. இலங்கையின் தேவைகள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையை ஆசிய அபிவிருத்தி வங்கி தயாரித்து வருகின்றது. உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டம், ரோக்கியோவில் ஜூன் மாதம் நடைபெறும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் அடைந்த முன்னேற்றத்தை சர்வதேச சமூகம் மதிப்பிட்டுள்ளது என்பதன் அடிப்படையிலேயே, ரோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கான உதவித் தொகைகள் கிடைக்கவிருக்கின்றன. இந்த மாநாட்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தெரிவித்தார்.

### வவுனியா வைத்தியசாலை தரமுயர்வு

வவுனியா ஆதார வைத்தியசாலை, பொது வைத்திசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் நாயகம், வவுனியா மாவட்ட பிரதி சுகாதார மாகாணப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர்கள், ஆளணித் தொகை, கட்டமைப்பு வசதிகள் ஆகியன அதிகரிக்கப்படவுள்ளதாக பிரதி சுகாதார மாகாணப் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# விடுமுறை தினங்களை கல்வி அமைச்சு மீளாய்வு

இந்த வருட பாடசாலை விடுமுறைத் தினங்களை மீளாய்வு செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போதைய நடைமுறையில், இந்த வருட முதலாவது தவணை ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி முடிவடையும். 2 ஆவது தவணை புதுவருட விடுமுறைக்குப் பின் மே மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகும். ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி இரண்டாம் தவணை முடிவடையவுள்ளது. மூன்றாம் தவணை ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பித்து நவம்பர் மாதம் 28 ஆம் திகதி முடிவடையும்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. முதலாம் கட்டம் அடுத்த மாதம் 21 ஆம் திகதி ஆரம்பித்து மே மாதம் 3 ஆம் திகதி முடிவடையும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# இன்றைய நாள் இனிய நாள்

## 09-03-2003 - ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| மேடம் | :- புதிய ஸ்தானம், தொழில் சிறப்பு, பண வரவு, வாக்கு வசீகரம், தார - புத்திர சுகம். |
| இடபம் | :- பெண்களால் கெடுதல், தேக மெலிவு, இனசனத்தால் கவலை, காரியக் கேடு. |
| மிதுனம் | :- தனதானிய நிறைவு, காரிய சித்தி, இல்லச் சிறப்பு, புத்திக்கூர்மை. |
| கர்க்கடகம் | :- வீண் பயம், அந்நியதேச சஞ்சாரம், கெட்ட சகவாசம், தனதானிய நிறைவு. |
| சிங்கம் | :- தேகசுகம் பாதிக்கப்படும், சத்துரு பயம், வரவுக்கு மிஞ்சிய செலவு, நற்கீர்த்தி. |
| கன்னி | :- சௌபாக்கியம், தொழில் சிறப்பு, வாக்கு வசீகரம், ஆபரண இலாபம், குடும்ப சுகம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- உறவினருடன் மனக் கசப்பு, அதிக பிரயாசம், நிலை பிரிவு, குடும்ப மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | :- வாக்குக் கலகம், பொறாமை, ஏமாற்றம், தனதானிய விருத்தி, இனசனக் கொண்டாட்டம். |
| தனு | :- குடும்ப மனஸ்தாபம், புதிய ஸ்தானம், தேக ஆரோக்கியம், பெரியோர் மதிப்பு. |
| மகரம் | :- பண வரவு, புதிய ஸ்தானம், தொழில் சிறப்பு, பயணற்ற பிரயாசம். |
| கும்பம் | :- பொருட் சேதம், வயிறு மார்பில் வலி, வீண் அலைச்சல், மனப்பயம். |
| மீனம் | :- லட்சுமிகரம், மனச் சந்தோசம், பெரியோர் மதிப்பு, வயிற்றுவலி. |


# இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டம் 2002

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம்பெறும்.

01. நாவல்
02. சிறுகதை
03. கவிதை
04. நாடகம்
05. சிறுவர் இலக்கியம்
06. இலக்கிய ஆய்வும் விமர்சனமும்
07. உயர்கல்விக்கான நூல்கள்

மேற்காட்டப்பட்ட துறைகளைச் சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பி வைக்கலாம்.

போட்டி விதிகள்

01. ஒரு எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்.
02. பங்கு பற்றும் எழுத்தாளர் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 8 மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
03. நூல்கள் 2002 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆந் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆந் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
04. போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கு நூல்களை அனுப்பும் போது நான்கு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
05. போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் மே 15 ஆந் திகதிக்கு முன்னர்

உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
திருகோணமலை.

எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆர்.தியாகலிங்கம்,
செயலாளர்.

(சி/663)

# சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 09.11.1959 இல் பிறந்த சதயம் 4 ஆம் பாதம். கனடாவில் நிரந்தர தொழில் புரியும் சைவ போசன மணமகனுக்கு படித்த, அழகிய, சைவபோசன மணமகள் தேவை. திருமணத்தின் பின் சைவபோசனமாக இருக்க விரும்புபவர்களும் தொடர்புகொள்ளவும். (படத்துடன் தொடர்பு கொள்ளவும்) விளம்பர இல.10, மே/பா நமது ஈழநாடு, யாழ்ப்பாணம். (272)

THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH WITH GRAMMER
N.VIGNESWARAN ARCHERY
BLACK ROAD, CHANKANAI
426 (302) K.K.S ROAD. JAFFNA.
(சி-664)

ராஜா
யாழ்ப்பாணம்.
அஜித், சிம்ரன், கவுண்டமணி, செந்தில் நடித்த
அவள் வருவாளா
நேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜயகாந், மீனா நடித்த
தேவன்
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
U 571
அதிரடித் தாக்குதல் நிறைந்த படம்.
(சி-627)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் கட்டுப்படுத்த கடற்படைக்கு உத்தரவு

வட - கிழக்குக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்- கடற்படையினருக்கு விசேட உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்திய மீனவர்கள்- இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தலில் ஈடுபடுவதால், இந்திய - இலங்கை மீனவர்களுக்கிடையில் சமீப நாட்களாக மோதல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால், இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் இடையிலும் முரண்பாடு ஏற்படும் சூழல் உருவாகியிருக்கின்றது.

இதையடுத்தே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்- இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கடற்படையினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனால், வடக்கு மற்றும் வட மேற்கு, வட-கிழக்குக் கடற்பரப்புக்களில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகக் கடற்படையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய மீனவர்களின் அத்துமீறலால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து இந்திய - இலங்கை அதிகாரிகள் நேரில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். இந்தச் சந்திப்பிலே அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பினுள் மீன்பிடிக்கும் இழுவைப்படகின் சொந்தக்காரர் அல்லது அதன் தலைவரைத் தடுத்து வைத்திருந்து, சட்ட நடவடிக்கை எடுப்பதென்றும், ஏனைய மீனவரை விடுவிப்பதென்றும் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

இதையடுத்தே- மன்னாரிலும், காரைநகரிலும் கைதான மீனவர்களில் ஒருபகுதியினர் விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

## காஞ்சிரங்குடாவில் நினைவுத்தூபி அமைக்க ஏற்பாடு

(அம்பாறை)

அம்பாறை - காஞ்சிராங்குடாவில் ஆர்ப்பாட்டம் செய்த பொதுமக்கள் மீது விசேட அதிரடிப்படையினர் நடத்திய தாக்குதலில்- உயிரிழந்த எட்டுப் பொதுமக்கள் நினைவாகவும் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் காஞ்சிராங்குடாவில் இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ஸ்ரான்லி இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டுவைத்தார். இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தனனும் கலந்துகொண்டார்.



அண்மையில் புனித ஹென்றியரசர் கல்லூரியில் நடந்த வைபவம் ஒன்றில், சைவப்புலவர் செல்லத்துரை எழுதிய "நியாயத்தான்" சிந்து நடைக்கூத்தின் முதற்பிரதியை ஆசிரியர் விஜயகுமாரிடம் இருந்து புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ஜஸ்ரீன் ஞானப்பிரகாசம் அடிகளார் பெற்றுக் கொள்ளுவதைப் படத்தில் காணலாம்.

# தொலைபேசிக் கட்டண உயர்வினை 'ரெலிகொம்' நியாயப்படுத்த முடியாது!

## அமைச்சர் ரவி கருணாநாயக்க

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தொலைபேசிக் கட்டணத்தை தன்னிச்சையாக அதிகரிக்க எடுத்த முடிவு, வாழ்க்கைச் செலவைக் குறைக்கும், அரசாங்கத்தின் முயற்சிகளைப் பெரிதும் பாதிக்கும் என்று, வர்த்தக பாவனையாளர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் தொலைபேசிக் கட்டண அதிகரிப்பைச் செய்யவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்ததையடுத்து, அந்நிறுவனத்துக்கு அமைச்சர் ரவி கருணாநாயக்க எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது- வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக்குறைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்நிலையில், தொலைபேசிக் கட்டணங்களை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை, வாழ்க்கைச்செலவைக் குறைக்கும் முயற்சியைப் பெரிதும் பாதிக்கும்.

உலகில் தொலைபேசிக் கட்டணங்கள் குறைக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, இலங்கையில் மட்டும் வெகுவாக அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

ரெலிகொம் எந்தவகையிலும் தொலைபேசிக் கட்டணயுயர்வை நியாயப்படுத்த முடியாது என்றும், கட்டண அதிகரிப்பு முயற்சியை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கட்டுநாயக்க ஊடாகப் புலிகள் விமானங்களைக் கொண்டு வந்தனர்

## அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்



(கொழும்பு)

பேச்சுக்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் புலிகள்- கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாக வானொலி உபகரணங்களையும், இலகு விமானங்களையும் கொண்டு வந்து சேர்ப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு நூலகக் கேட்போர் கூடத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அனுரா பண்டார நாயக்க மேலும் தெரிவித்ததாவது,

புலிகள் ஒஸ்லோவில் நடந்த பேச்சுக்களின் பின்னர் வன்னிக்குத் திரும்பியபோது, வானொலி உபகரணங்களைக் கொண்டுவந்தனர்.

இதற்கு எந்தக் கட்டுப்பாடுகளும் அரசாங்கத்தினால் விதிக்கப்படவில்லை. சுங்கச்சோதனைகளோ, தீர்வைகளோகூட இல்லாமல் புலிகள் இந்த விமானங்களை வன்னிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துள்ளனர்.

இந்த விமானங்களைப் பயன்படுத்திப் புலிகளால்- பிரதமரின் அலரி மாளிகை, ஜனாதிபதி மாளிகை என்பனவற்றைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தமுடியும்.

ஆனால், அரசாங்கம் இதைப் பற்றி எதுவும் கவலைப்படாமலிருந்து கொண்டிருப்பதாக அனுரா பண்டார நாயக்க மேலும் தெரிவித்தார்.

# ஆயுதங்களைக் கடத்தும் படகுகளை தடுத்துவைக்க மாரப்பன பணிப்பு!

இலங்கைக் கடற்பரப்புக்குள் ஆயுதங்களைக் கடத்துவதாகச் சந்தேகிக்கப்படும் எந்தப்படகையும், கடற்படையினர் தடுத்து நிறுத்திக் கைப்பற்றுமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கடற்படையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பில் ஆயுதங்கள் படகுகள் மூலம் கடத்தப்படுவதாகத் தகவல் கிடைத்தால், உடனடியாக நடவடிக்கையில் இறங்கி, அவற்றைக் கைப்பற்றுமாறு உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

இந்த உத்தரவுக்கமைய வட - கிழக்குக் கடற்பரப்பில் பயணிக்கும் சந்தேகத்துக்கிடமான படகுகள், கப்பல்கள் சோதனையிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வனவளப் பாதுகாப்புக்கு இராணுவ உதவிகோரப்பட்டது!

(கொழும்பு)

இலங்கையின் வனவளத்தைப் பாதுகாக்க வனவளத் திணைக்களம் இராணுவத்தினரின் உதவியை நாடியுள்ளது. வனவளப் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதையடுத்தே இராணுவத்தினரின உதவிகோரப்பட்டுள்ளது என்று வனவளத் திணைக்களப் பணிப்பாளர் சரத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வனவளப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு - இராணுவத்தினர் பயிற்சிகளை வழங்கவிருப்பதுடன், படையினர் காடுகளில் தேடுதல் வேட்டைகளையும், ரோந்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவுள்ளனர்.

யானை முதலான விலங்குகளை வேட்டையாடுவோர் மற்றும் சட்டவிரோதமாக மரங்களைக் கடத்துவோரைக் கட்டுப்படுத்தவே இராணுவத்தின்ரின் உதவி நாடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

# முஸ்லிம்களுக்குத் தனியான பிரதிநிதித்துவம் ரணில் விக்கிரமசிங்கவுடன் எம்.பிக்கள் பேச்சு!

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவொன்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான- அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்"டன்- தேசிய ஐக்கிய முன்னணி, நாடாளுமன்ற உறுப்பினர்களான பெரியல் அஷ்ரப், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, நூர்தீன் மசூர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அடுத்தசுற்றுப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் தனித்தரபபாகக் கலந்து கொள்வது குறித்தே இந்தப் பேச்சுக்களில் முக்கியகவனம் செலுத்தப்பட்டது.

முஸ்லிம் எம்பிக்களின் கோரிக்கையை பிரதமர் ரணில் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

# வைகோ, நெடுமாறனைச் சந்திக்க தமிழகப் பொலிஸ் கடும் கட்டுப்பாடு!

(சென்னை)

பொடா சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் ஆகியோரைச் சந்தித்துப் பேசுவதற்குப் புதிய கட்டுப்பாடுகளைத் தமிழகப் பொலிஸார் விதித்துள்ளனர்.

சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வைகோ, நெடுமாறன் ஆகியோரைச் சந்திப்பதற்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதாகவும், தனியாக அவர்களைச் சந்திப்பதற்குத் தமிழகப் பொலிஸார் அனுமதி வழங்க மறுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதாகக் குற்றஞ்சாட்டித் தமிழக அரசு- வைகோ, நெடுமாறன் உள்ளிட்ட பலரை பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருப்பது தெரிந்ததே.

# வன்னிக்கான மின் விநியோகப்பணி நிதியுதவி கிடைத்தால் ஆரம்பிக்கும்!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான மின்சார விநியோகத் திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக இலங்கை மின்சார சபையின் வட மாகாண அத்தியட்சகர் முத்துரட்ணானந்தன் தெரிவித்திருக்கிறார்.

யாழ். குடாநாட்டில் முழுமையான மின்சாரவசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகவும், அடுத்த கட்டமாக வன்னிப்பகுதிக்கான மின் விநியோகத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாகக் கிளிநொச்சியில் ஐந்து மெகாவாட் உற்பத்தி வலுவுள்ள மின் உற்பத்தி நிலையம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கென 780 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து மின்சார அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியுதவிகள் கிடைத்ததும், இந்த மின் உற்பத்தித் திட்டத்தை அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சின்ன மீனைப் போட்டு

அவர்கள் கனவு கண்டதுபோல யாழ்.குடாநாட்டைப் புரட்டிவைக்கும் படலம் மிகவிறுவிறுப்பாக ஆரம்பமாகியது. படித்தவன், பாமரன் என்ற வேறுபாடுகளின்றி அவர்களின் மோசடி வலையில் யாழ். குடாநாட்டு மக்கள் பலரும் சிக்கிக்கொண்டிருந் தனர். இவர்களின் வலையில் வீழ்ந்த ஒவ்வொருவரும் அவர்களால் வெவ்வேறு நிலைமையில் வைத்துப் பேணப்பட்டனர். அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ஒவ்வொரு காரியங்களும் மிகநுட்பமாக நகர்த்தப்பட்டன. இந்த நகர்த்தலில் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு முகம் வெளிக்காட்டப்பட்டது. அந்த முகங்களில் நம்பிக்கை ஒளி வீசியது. இந்த நம்பிக்கை ஒளியின் பின்னால் இருந்த இருள் சூழ்ந்த உலகம் இவர்களின் கண்களில் தெரியவில்லை.

யுத்தத்தாலும், அழிவுகளாலும் அலைக்கழிந்துபோன மனங்கள், அவர்களின் ஆசை வார்த்தைகளில் மூழ்கித்திளைத்தன. உடைந்துபோன தன்னம்பிக்கை, அவர்களின் வார்த்தை ஜாலங்களால் விஸ்வரூபம் எடுத்தது. சிதைந்துபோன தமது வாழ்க்கையைக் கட்டிவளர்க்கவும், வாழ்க்கைப் போட்டியில் வெற்றிபெறுவதற்கும் தமக்குத தோள்கொடுக்கக்கூடியவர்கள் இவர்களே என்ற எண்ணம் மேலெழுந்தது.

மோசடிவலை ஒன்றுக்குள் சிக்கிக் கொண்டிருப்பது பற்றிய சிறு சந்தேகங்கூட அப்போது அவர்களுக்கு ஏற்படவில்லை. இவற்றைத்தான் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்கள் கூறுகின்றன.

பல்தேசியக் கம்பனிகளின் யாழ்ப்பாணத்துக்கான பிரதிநிதி நான் என்று ஒரு முகங்கூறும். கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட யாழ். மாணவர் சமூகத்துக்கு அதிக சலுகையுடன் உயர் கல்வி வாய்ப்பை வழங்க முன்வரும் இன்னொரு முகம், வேலைவாய்ப்புக்கள் எதுவுமின்றியும், வருமானம் எதுவுமின்றியும் உழன்றுகொண்டிருக்கும் இளைஞர் குழாத்துக்கு, மிகக் கவர்ச்சியான சம்பளத்துடன் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வலிந்து முன்வரும் வேறு ஒருமுகம். இவ்வாறாகப் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் வெவ்வேறு தரப்புக்களுக்கு ஒட்டுமொத்தமாக விமோசனம வழங்கும் தரப்பாகத் தம்மை அடையாளம் காட்டிக்கொள்வதில் அவர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

வெளிப்பார்வைக்கு இரட்சகர்களாகக் காட்சி கொடுக்கும் இவர்கள் - மிகவும் கைதேர்ந்த ஏமாற்றுப் பேர்வழிகள் என்பதை அந்த இறுதி நாள்வரை எவரும் புரிந்துகொள்ளவில்லை. எப்படித்தான் முடிந்தது இவர்களுக்கு, ஒரே சமயத்தில் அதிகம் பேரை ஏமாற்றிக் கொள்வதற்கு. இவர்களால் ஏமாற்றப்பட்டவர்களின் அனுபவங்களிலிருந்தே இதற்குப்பதில் கிடைக்கும்.

இதில் வேடிக்கை என்னவென்றால் - முக்கியமாக ஒரு தனிநபரே தன்னைப் பலவகையிலும் - பல்வேறு முகங்களினூடாகவும் காட்டிக் கொள்ள முனைந்ததுதான்.

சிறிய மற்றும் பெரிய கைத்தொழிலாளர்களையும், வர்த்தகர்களையும், அவர்களின் உற்பத்திகளையும் உலகுக்கு அறிமுகப்படுத்தப் போவதாக அந்தக் குழுவினர் பகிரங்க அறிவித்தல் செய்தனர்.

இதற்காகக் குடாநாட்டுப் பத்திரிகை ஒன்றில் விளம்பரமும் செய்யப்பட்டிருந்தது. வியாபாரக் கையேடு ஒன்றை, மாதாந்தம் வெளியிடவிருப்பதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. இப்பிரசாரத்தை நம்பி - மோசம்போன வர்த்தகர்கள் அதிகம். இப்பிரசாரத்துக்காக இளைஞர்கள் பலர் பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர். வேலை வாய்ப்புத் தேடிவந்த இந்த இளைஞர்களிடமிருந்து மிகவும் தந்திரமாக ஊதியம் எதுவுமின்றி வேலை வாங்கப்பட்டிருக்கிறது. கணிசமான தொகைப்பணம் யாழ்.வர்த்தகர்களிடமிருந்து இந்த இளைஞர்களால் சேகரித்து மேற்படி குழுவினரிடம் வழங்கப்பட்டிருக்கிறது.


அவர்களின் அலுவலகம் ஒரு குட்டிக் கச்சேரி போலவும் செயற்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் பலவுள்ளன. இவர்களின் செயற்பாடுகள் அனைத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி ஆராயும்போது இவ்வுண்மை புலப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பிறக்காத ஒருவருக்குப் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் தேவையா?, உங்களுக்குத் தேவையான காரணத்தைக் குறிப்பிட்டு மரணச்சான்றிதழ் தேவையா? இவற்றைவிட, கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களுக்கு அவசியமான கல்விச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வது எப்படி? பொதுமக்கள் மாதக் கணக்கில் அலைந்து திரிந்தும் பெற்றுக்கொள்ளமுடியாத பல ஆவணங்களை, ஒரேயிடத்தில் தயாரித்து விநியோகிப்பதற்கு இவர்களிடம் ஏற்பாடுகள் பல இருந்தன. இவற்றைவிட அரசினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டு ஆகியவற்றில் மாற்றம் செய்வதற்கும் இவர்கள் தயக்கம் காட்டுவதில்லை. இதன் மூலம் தாம் நினைப்பதை இவர்களால் இலகுவாகச் சாதிக்க முடிந்திருக்கிறது. இவர்கள் தயாரித்து விநியோகித்த போலி ஆவணங்கள் பல அனைவரின் கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு, உற்சாகமாகத் தற்போதும் உலாவருகின்றன.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமாகவும், அந்த அலுவலகம் செயற்பட்டிருக்கிறது. குறிப்பாக அரபு நாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தருவதாகக் கூறிக்கொண்டு மற்றுமொரு மோசடிவலை வீசப்பட்டது. யாழ்.குடாநாட்டின் நடுத்தர வர்க்கத்தினரைக் கவரக் கூடியவகையில், நன்கு திட்டமிட்டு இந்தக் காரியம் ஆரம்பிக்கப்பட்டது. வெவ்வேறு தரத்திலான பதவிப் பெயர்கள் பட்டியல் போடப்பட்டு, அவற்றுக்கு எதிரே மிகக்கவர்ச்சியான சம்பளத்தொகையும் குறிப்பிடப்பட்டு, பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது. இப்பட்டியல் அவர்களின் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டது. இப்பட்டியலைப் பார்வையிடவரும் இளைஞர்களுக்கு ஆசைவார்த்தைகள் அள்ளிவீசப்பட்டன. இவற்றை நம்பி வெளிநாடு செல்வதற்காக முற்பணம் செலுத்திய இளைஞர்கள் அதிகம். ஆனால், பயண ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

- இவ்வாறு முற்பணம் செலுத்திய இளைஞர்கள் பலர். இவர்களைத் தேடி அடிக்கடி அவர்களின் அலுவலகத்திற்குச் செல்ல ஆரம்பித்துவிட்டனர். இது தினசரி தலைவலி கொடுக்கும் பிரச்சினையாக உருவாகியது. அப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அற்புதமான ஆலோசனை ஒன்று அவர்கள் வசம் இருந்தது.

(தொடரும்)



இதுதான் அவர்களின் அலுவலகம்.

SAC
வியாபார கையேடு
வாங்கலாம் விற்கலாம்
மிக மிக துரிதமாகவும், வேகமாகவும் கட்டி எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் வட-கிழக்கில் உங்கள் உற்பத்திகளையும் / சேவைகளையும் அறிமுகப்படுத்த ஒரு அரிய சந்தர்ப்பம்.
சிறிலங்கா முழுவதிலும் உள்ள மொத்த வியாபாரிகளையும், மற்றும் உற்பத்தியாளர்கள், ஏற்றுமதி / இறக்குமதியாளர்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வைத்தியர்கள், சட்டவல்லுநர்கள், வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள், தங்குவிடுதிகள், உணவு விடுதிகள், நகைமாடங்கள் போன்றவற்றின் பெயர், விபரம் அடங்கிய ஒரு கையேட்டை தயாரித்து மிக விரைவில் வட - கிழக்கு முழுவதும் விநியோகிக்க உள்ளோம்.
இக்கையேட்டில் உங்கள் உற்பத்திகளையும், சேவைகளையும் விளம்பரம் செய்து உங்கள் இலாபத்தை பெருக்கிக்கொள்ளுங்கள்.
The Manager,
Survey & Analysis Centre,
No:177, 1st Cross Street,
Vembady, Jaffna, Srilanka.
T.P/Fax: 0094-21-222-2705
Email : Surveyanalysis@hotmail.com

உடன் தேவை SAC
எமது நிறுவனம் மிக விரைவில் வெளியிடவிருக்கும் சிறிய / பாரிய கைத்தொழில் யாத இதழ், வியாபாரிகள் விவரங்கள் அடங்கிய கையேடு (Business Guide) என்பவற்றுக்கு நிருபர்களும், விளம்பர சேகரிப்பாளர்களும் தேவை.
விண்ணப்பப்படிவங்களுடன் நேரில் வரவும்
முடிவு திகதி - 10. 01. 2003
Survey & Analysis Centre
No.177, 1st Cross Street,
Vembady, Jaffna.
(12807)
வியாபார கையேடு SAC
Business Guide
வியாபாரிகளே!
முழுக்க, முழுக்க வட - கிழக்கு வியாபாரிகளையும், வாடிக்கையாளர்களையும் மையமாகக்கொண்டு தயாரிக்கப்படும் வியாபாரக் கையேட்டில் உங்கள் வியாபார நிலைய விவரங்களையும் பதிவு செய்து, அதிஉச்ச பயனைப்பெறுங்கள்.
The Manager
Jaso Plastric (P) Ltd,
35, Kannathiddy Road,
Jaffna.
(12808)
The Manager
Survey & Analysis Centre
No.177, 1st Cross Street,
Vembady, Jaffna.

# பெரிய மீனைப் பிடிப்பது எப்படி....?

பகுதி 2

## பனங்காட்டு நரியார் புலனாய்வில்...

# புதிய பொலிஸ் கொள்கைப் பிரகடனம் ஏற்பு நிகழ்வு காங்கேசன்துறையிலும்!

புதிய பொலிஸ் கொள்கைப் பிரகடனம் செய்யும் நிகழ்வு நேற்று காங்கேசன்துறையில் நடைபெற்றது.

காங்கேசன்துறையிலுள்ள வடபிராந்தியப் பிரதிப்பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அன்ரனி, பொலிஸ் அத்தியட்சகர் ஹெற்ற தர்மசிறி, உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள் லயனல் ஜெயசேகர, பிரேமரத்ன, குணதிலக மற்றும் யாழ்.மாவட்டத்தில் கடமைபுரியும் நூற்றுக்கணக்கான பொலிஸாரும்- யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.வரதராஜா முன்னிலையில் கொள்கைப் பிரகடனம் செய்துகொண்டனர்.

பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை- நீதிபதி கே.பி. வரதராஜாவும், பொலிஸ் அத்தியட்சகர் அன்ரனியும் ஏற்றுக்கொண்டனர்.

பல நூற்றுக்கணக்கான பொலிஸார் அணிவகுத்து நிற்க, கொள்கைப் பிரகடனம் சிங்களம் - தமிழ் - ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வாசிக்கப்பட்டது.

பின்னர், யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி வரதராஜா கொள்கைப் பிரகடனச் சான்றிதழுக்குக் கைச்சாத்திட்டுக் கொள்கைப் பிரகடனத்தைச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அன்ரனியிடமும், பொலிஸ் அத்தியட்சகர்களிடமும், உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்களிடமும் கையளித்தார்.

நாடு முழுவதும் இத்தகைய பொலிஸ் கொள்கைப் பிரகடனம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. பொலிஸ்மா அதிபர் ஏ.ஈ.ஆனந்த ராஜா உட்பட அனைத்துப் பொலிஸாரும் இக்கொள்கைப் பிரகடன உறுதிமொழியை ஏற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.



உறுதிமொழி எடுக்கும் பொலிஸ் அதிகாரிகளை முதலாவது படத்திலும் பொலிசாரின் அணிவகுப்பை நீதிபதி வரதராஜா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அன்ரனி ஆகியோர் ஏற்றுக் கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்

# திக்கம் வடிசாலையை ஒப்படைக்கக்கோரி அமைச்சர் அலுவலகம் முன் மறியல் போர்

வடமராட்சி திக்கம் வடிசாலையை இயங்கவைக்கத் தடையாக இருக்கும் இந்து கலாசார அமைச்சரின் அலுவலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வடமராட்சி தென்னை பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாளொன்றிற்கு 50 ஆயிரம் லீற்றர் பனங்கள்ளைப் பெறுகின்ற போதிலும் அதனை முழுமையாக வடிசாரமாக்குவதற்கு முடியாத நிலையில் நிலத்தில் ஊற்ற வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இந்நிலையில் இந்து கலாசார அமைச்சு திக்கம் வடிசாலையை எம்மிடம் தந்தால் இவற்றை முழுமையாக வடிசாரயமாக்க முடியும் எனவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வாழ்க வளமுடன்
HAPPY BIRTHDAY
முதலாவது அகவையில்

பெயர் : க.ஜதீபன்
முகவரி: மங்களபதி, அல்வாய்.
ஐந்தாவது அகவையில்

பெயர் : க.அபிஷன்
முகவரி: கோப்பாய் மத்தி, கோப்பாய்.
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------------------
பெற்றார் ஒப்பம்

# விளையாட்டு அரங்கம்

# ரசிகா ரசிகா



இன்றைய உலகக்கிண்ணப் போட்டிகளில் ground support என்பது மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. ஒரு அணிக்குத் தங்களுடைய Team unity எந்தளவுக்கு வெற்றி பெறுவதற்கு உதவிசெய்கின்றதோ, அதேபோல ரசிகர்களுடைய கைதட்டல்களும் அவர்களுடைய ஆட்டத்திற்கு மிகவும் உத்வேகத்தைக் கொடுக்கின்றது என்பதுதான் உண்மையான விடயம். இன்றைய உலகக்கிண்ணப் போட்டிகளில், போட்டி நடைபெறும் நாடுகளில் ஒன்றாகிய தென்னாபிரிக்க அணியின் வெளியேற்றம், super six ஆட்டங்களில் எந்தளவுக்கு ரசிகர்களுடைய ஆரவாரத்தினைக் காட்டும் என்பது ஒரு கவலைக்குரிய விடயம்தான். தங்களுடைய தென்னாபிரிக்க அணி அரையிறுதிப் போட்டிக்குக் கட்டாயம் வரும் என்பது அவர்களுடைய கனவாக இருந்தது. ஆகவே, விற்கப்பட்ட Tickets எல்லாம் தென்னாபிரிக்க ரசிகர்களுக்காகவே இருந்தது. ஆனால், இன்று super six அணிகள் எல்லாம் மைதானத்தில் ground support இல்லாமல் தவிக்கின்றன. பொதுவாகக் கிரிக்கெட் ரசிகர்களை நாங்கள் இருவகையாக வகைப்படுத்தலாம். அவர்களில் ஒருசிலர் தீவிரவாத ரசிகர்கள், மற்றவர்கள் மிதவாத ரசிகர்கள். பொதுவாக

இந்திய ரசிகர்கள் கிரிக்கெட்டினை மிகவும் தீவிரமாக நேசிக்கின்ற ரசிகர்கள். அதிலேயும் கொல்கத்தா, ஈடன் கார்டன் ரசிகர்களை அதிதீவிர ரசிகர்கள் என்றே கூறலாம். இந்தநேரத்திலே 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய - இலங்கை அணிகளுக்கிடையே ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போட்டி நினைவிற்கு வருகின்றது. அந்தப்போட்டியில் இந்திய ரசிகர்கள் நடந்துகொண்டவிதம் மிகவும் அருவருக்கத்தக்கது. தோல்வியைத் தாங்காத இந்திய ரசிகர்கள் - அப்பப்பா, இவர்களிடம் தப்பவேமுடியாது. இந்திய அணி தோற்றால், அணி வீரர்களுடைய வீடுகளைக் கொழுத்துவார்கள், படங்களுக்குச் செருப்பு மாலை போடுவார்கள்.

பொறுப்பான ரசிகர்கள் இவர்கள். அன்று பாகிஸ்தானுடன் இந்தியா தோற்றிருந்தால், இவர்கள் நாடு திரும்பியிருக்க முடியுமா? ரசிகர்களின் கோபம் எல்லை மிறியிருக்காதா? ஆனால், தீவிரவாதப் போக்குடைய பாகிஸ்தான் ரசிகர்கள் தற்போது ஒருவிதமாகத் திருந்தி வருகின்றார்கள். Wel Come. ஆனால், ஒன்று - பல பாகிஸ்தான் வீரர்களை மரியாதையாக ஓய்வுபெற வைத்திருக்கின்றார்கள். நல்ல விஷயம். யார் மரியாதையான ரசிகர்கள் என்றால் - முதலிடம் இலங்கை ரசிகர்களுக்குத்தான். அத்துடன், இன்று கவலையுடன் காணப்படுகின்ற தென்னாபிரிக்க ரசிகர்களும் ஒரு சிறந்த ரசிகர்கள்தான். பொதுவாக மேற்கிந்தியத்தீவு ரசிகர்கள் தங்களுடைய நாட்டில் நடைபெறுகின்ற போட்டிகளில், வேறு நாடுகளை மரியாதை கெடுத்து அனுப்புவதுதான் அவர்களுடைய பெருந்தன்மை.



இங்கிலாந்து ஆட்டக்காரர்களில் சில நிறவெறித்தன்மை காணப்பட்டாலும், இந்த ரசிகர்கள் World No - 1 decent people தான். கடந்த வருடம் உலகக் கோப்பையைக் கைப்பற்றிய அவுஸ்திரேலிய அணி ரசிகர்களும் தோல்வியை அவ்வளவாகத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள். கிரிக்கெட் fans இல்லாத போட்டிகள் மிகவும் புழுக்கமாகத்தான் இருக்கும். ஆனால், ரசிகர்கள் கொஞ்சம் அடக்கிவாசிக்கலாமே?

– P.N.சுதர்சன் –

# ஒதுங்கிப் போங்களேன்...




Rain, Rain.. Go away!

2003 உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் தொடர்பில் எல்லோருக்கும் ஒரு மயக்கத்தையும், வெறுப்பையும் தந்துகொண்டிருப்பது Duekwort / LEWIS விதியாகும். தற்போது இந்த விதியின் கீழ் எத்தனை பந்துகளில், எத்தனை ஓட்டங்கள் தேவை என்பனபோன்ற விடயங்களை SCORE BOARD இல் காட்டமுடியுமா? என்று யோசிக்கிறார்கள். ஆனால், இது நூற்றுக்கு நூறு சரியான முறையில் கணிக்கப்படவேண்டும் என்பதிலும், இதில் மனிதத் தவறு ஏற்பட்டுவிடாதவகையில், கணினிகளின் பயன்பாடு இருக்கவேண்டும் என்பதிலும் மிகக்கவனமாக இருக்கிறார்கள். மழை பெய்யும் போது அல்லது அதன் பின்னர் அணித்தலைவர்கள் பேப்பரும், பென்சிலும் கொண்டு திரிந்து கணக்குப்பாடம் படிப்பது, ஏற்பாட்டாளர்களைச் சிந்திக்க வைத்திருக்கிறது. அதிலும், தென்னாபிரிக்கா - சுற்றுப்போட்டியிலிருந்து வெளியேறியமுறை எல்லோர் நெஞ்சங்களிலும் சுமையாகப் பதிந்துள்ளதுபோலத் தெரிகின்றது.

– நர்மதா –

அவுஸ்திரேலியா, இங்கிலாந்தில் தற்போது தேவையின் அளவு காட்சிப்படுத்தும் முறை இருக்கிறது. SA காட்சிப் பலகைகள் இந்தத் தேவைக்குப் போதுமானவை என்றே நினைக்கிறேன் என்கிறார் ICC உயர் அதிகாரி டேவ் றிச்சட்சன் (ஒரு குறிப்பு - ஒரு பந்தில் இருபத்தியிரண்டு ஓட்டங்கள் எடுக்கக் களத்தில் இறங்கிய இருவருள் இவரும் ஒருவர்). சிந்தனை நல்லது. தவறுகளிலிருந்து பாடங்கள் படிக்கிறார்கள். அவற்றைச் சரியானமுறையில் அமுல்நடத்தவும் முயல்கிறார்கள். இன்னும் இருப்பதோ ஏறத்தாழப் பத்து ஆட்டங்கள். அதுவும் மிகமுக்கிய ஆட்டங்கள். எனவே, வர்ணபகவான் போன்றவர்கள், சில நாட்கள் ஒதுங்கியிருந்து கொண்டால் நல்லதென்று நினைக்கிறார்கள். WEATHER GOD PLEASE...

# உலகம் ஒன்றுதான்

உலகக்கிண்ண super six அணிகளைத் தனது அணியில் சேர்த்துக்கொள்ள இந்தியா முயற்சி செய்கின்றது. எல்லாம் இரவு - பகல் விவகாரம்தான். எதிர்வரும் ஆட்டங்களில் ஒரு அரையிறுதி ஆட்டம் இரவு - பகல் ஆட்டமாக அமைய இருக்கிறது. 20 ஆம் திகதி KINGSMEAD - DURBAN ஆட்டமே அது. இந்த ஆட்டம் தங்களுக்குத்தான் என்று இந்தியா தீர்மானித்துவிட்டதுபோலத் தெரிகிறது. மேலும் இரவு - பகல் ஆட்டங்களில் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடும் அணிகள் தோல்வியடைந்து வந்ததும் நிதர்சனமாகத் தெரிகின்றது. இதுவரை நடைபெற்று முடிந்த ஏழு ஆட்டங்களில், ஆறில் முதலில் துடுப்பெடுத்தாடிய அணியே வென்றிருக்கிறது. இந்த நிலையில்தான், இந்திய அணி இந்த விடயத்தில் அணி சேர்க்கிறார். முக்கியம் இதுவல்ல. இந்தக் கோரிக்கையை ஏற்கமுடியாது என்று அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். இதற்கான காரணங்களையும் தெளிவாக அவர்கள் எடுத்துக்காட்டுகிறார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் ஏற்கனவே திட்டமிட்டுவிட்டார்கள். விமானங்களுக்கு டிக்கெட் எடுத்துவிட்டார்கள். ஹோட்டல்களில் அறைகள் BOOK பண்ணப்பட்டுவிட்டன. ஒளி, ஒலிபரப்பாளர்கள் இதற்குச் சம்மதிக்க மாட்டார்கள். இந்தநிலையில் மாற்றம் சாத்தியமற்றது. 2001 லேயே இவை எல்லாம் முடிவு செய்யப்பட்ட விடயங்களும்கூட. எனவே உண்மையில் இந்தியா இந்த விடயத்தை எடுத்திருக்கவேகூடாது என்பதே உண்மை. இதில் ஒரு சுவையான விடயம் அவதானிக்கப்பட வேண்டும். மின்னொளியில் துடுப்பெடுத்தாடவுள்ள இந்திய அணி, இந்த ஆட்டத்தில் வெற்றியும் பெற்று இரவு பகல் மாயை உடைத்தது, தொடர்ந்தும் - அதனை உடைக்க இந்தியா முயற்சி செய்யலாமே.

– நர்மதா –



# இந்திய சமஷ்டிக்கு மகிந்தவின் பிரசாரம்; ஒரு பின்னணியும் பல கதைகளும்!

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இலங்கையில் அமையப்போகும் சமஷ்டி ஆட்சி தமிழ் மாநிலத்துக்கு சுயநிர்ணய உரிமையுடன்கூடிய சுயாதிபத்திய அதிகாரங்கள் வழங்கப்பட்டால், இந்திய மாநிலங்களும் இதேபோன்ற அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்று கோரிப் போராட்டம் நடத்தினால் என்ன செய்வது என்ற பயம் இந்திய அதிகாரவர்க்கத்துக்கு ஏற்பட்டுவிட்டது. இதனால், அரசியல்வாதிகளுக்கும் புலியென்ற கிலியை ஏற்படுத்தியிருக்கிறது இந்திய அதிகார வர்க்கம்.

சுவிட்சர்லாந்து, டென்மார்க், நோர்வே, ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் என்று ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் கிளைகள் பரப்பிச்செல்லும் நைல்நதி - இந்த நாடுகளெல்லாவற்றுக்கும் பயன்கொடுத்து வருகிறது. நைல் நதி நீருக்காக இந்த நாடுகள் எதுவும் சண்டை போட்டதில்லை. எல்லாநாடுகளும் நைல்நதி நீரை நல்லமுறையில் பயன்படுத்துகின்றன. இந்த நாடுகள் எல்லாமே பொதுவாகச் சமஷ்டி ஆட்சி அமைப்பைக் கொண்டவையே.

இந்தியாவிலும் மகிந்த ராஜபக்ஷ சொல்வதுபோல, சமஷ்டி ஆட்சி அமைப்பு இருக்கத்தான் செய்கிறது.

கர்நாடகத்திலிருந்து காவிரி நீர் தமிழ்நாட்டுக்கு வருவதில் ஆண்டுதோறும் தகராறு. காவிரியில் நீர் வராததால் விவசாயம் செய்ய முடியாத தஞ்சை விவசாயிகள் சிலர் சமீபத்தில் தற்கொலை செய்து மாண்டனர். காவிரிநீர்ப் பிரச்சினையில் கர்நாடகத்துக்கும், தமிழ் நாட்டுக்கும் தகராறு. காவிரிக்கு நீர் திறந்துவிடக்கூடாதென்று, கர்நாடகத்தில் விவசாயிகள் போராட்டம்.

ஆந்திராவிலிருந்து தமிழ் நாட்டுக்குக் கிருஷ்ணாநதி நீர் திறந்துவிடுவதில் ஆந்திராவுக்கும், தமிழ் நாட்டுக்குமிடையில் சச்சரவு. கிருஷ்ணாநதி நீரைத் தமிழ்நாட்டுக்கு வழங்கக்கூடாதென்று ஆந்திராவில் எதிர்க்கட்சிகள் போராட்டம்.



இந்திராகாந்தி

தமிழ்நாட்டுக்கு வரும் நீரை மறுத்து, கேரளத்தில் பவானி ஆற்றின்மீது குறுக்கே அணைகட்டுவதைக் கேரள அரசு நிறுத்தவேண்டுமெனக்கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்குத்தாக்கல் என்பன போன்ற செய்திகள் அடிக்கடி ஊடகங்களில் வெளியாகின்றன.

கடலுக்குப்போய் நதி நீர் வீணாகினாலும், தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் கொடுக்க முடியாதென்பதில் கர்நாடகா, ஆந்திரா, கேரள அரசுகள் பிடிவாதமாக இருக்கின்றன.

கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்கள் - சந்தனக்கடத்தல் வீரப்பன் நடவடிக்கை காரணமாக, கர்நாடகக்காரரால் எச்சமயத்திலும் தாக்குதலுக்குள்ளாக நேரிடுமோவென்ற அச்சத்தில் வாழ்கின்றனர்.

இதேநிலைமை ஆந்திராவிலும் இருக்கிறது.


இந்நிலையில்தான் இந்தியாவில் சமஷ்டி ஆட்சி அமைப்புமுறை ஐரோப்பிய நாடுகளைவிடச் சிறப்பாக இயங்குவதாக - இந்திய உபசரிப்பில் மயங்கித் திரும்பிய மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

இந்தியாவில் முழுமையான சமஷ்டி அமைப்புமுறை இல்லை. இப்போதும், இந்திய மத்திய அரசாங்கத்திடமே சகல அதிகாரங்களும் குவிந்திருக்கின்றன. ஆங்காங்கே சில மாநிலங்கள் தங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கும்போது, அது தீவிரவாதம் என்று சொல்லி அடக்கப்பட்டுவிடுகிறது.

காஷ்மீரில் அப்பிரதேச மக்கள் விடுதலைகோரி - 1947 ஆம் ஆண்டு முதலே போராடி வருகிறார்கள். அது பிரிவினைவாதம் என்று முன்னர் அடக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அசாம், நாகலாந்து மக்களும் சுயாதிக்கம் வேண்டுமென்று கோரிப் போராட்டம் நடத்துகின்றனர். இவற்றையும் பிரிவினைவாதம் என்று அடக்கி ஒடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முன்பு காஷ்மீர் மாநிலத்துக்கு மற்றைய மாநிலங்களைவிட தனி அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. காஷ்மீர் மாநிலம் - பிரதமர் அந்தஸ்துள்ளதாக முன்னர் இருந்தது. மற்றைய மாநிலங்களில் சட்டமன்றத்தில் ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்யப்படுபவர் முதலமைச்சர் என்றே அழைக்கப்படுகிறார். இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்தபோது இந்தியப் பிரதேசத்துடன் காஷ்மீர் பகுதியை இந்தியா இணைத்துக்கொண்டது. காஷ்மீரின் மறுபகுதி பாகிஸ்தானுடன் இணைந்துகொண்டது. அந்தப் பகுதி ஆஸாத் காஷ்மீர் என்று அழைக்கப்படுகிறது.

ஜம்முகாஷ்மீர் மக்கள் தங்களுக்கு விடுதலை வேண்டுமென்று போராடுகிறார்கள். தேர்தல்கள் நடத்தி ஜம்முகாஷ்மீர் - இந்தியாவின் ஒரு பகுதியே என்று இந்தியா வாதாடுகிறது. இங்கு நடைபெறும் போராட்டத்தைப் பிரிவினைப் போராட்டமென்



வைகோ

றும், பயங்கரவாதக் கிளர்ச்சியென்றும், இதற்குப் பாகிஸ்தான் தூண்டுகோலாக இருக்கிறதென்றும் குற்றஞ்சாட்டுகிறது.

இந்நிலையில், இலங்கையில் முழுமையான சமஷ்டி ஆட்சி அமைப்பு ஏற்பட்டு, தமிழ்மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையுள்ள சுயாதியத்திட்டம் வழங்கப்பட்டால் - காஷ்மீர் மட்டுமல்ல மற்ற மாநிலங்களும் கிளர்ச்சிசெய்யும், இந்தியா நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என்று இந்திய அதிகார வர்க்கம் அஞ்சுகிறது.

கிழக்குப் பாகிஸ்தானிய மக்கள் - மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியினரால் அடக்கி ஒடுக்கப்பட்டபோது, ஷேக்முஜிபுர் ரஹ்மான் தலைமையில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் போராடினார்கள். அடக்குமுறை அதிகரித்து, கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் பெருமளவில் இந்தியாவின் மேற்கு வங்கத்துக்குள் அகதிகளாக வந்துகுவிந்தனர். கிழக்குப் பாகிஸ்தான் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டுமென்று அன்றைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி உலக நாடுகளுக்குக் கோரிக்கைவிடுத்தார். உலக வல்லரசுகள் அகதிகளுக்கு உதவியளிக்கவே முன்வந்தன.

இந்திராகாந்தி வல்லரசுகளின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் நடவடிக்கை எடுத்தார். இந்திய இராணுவம் - கிழக்குப் பாகிஸ்தானுக்குள் நுழைந்தது. கிழக்குப் பாகிஸ்தான் - வங்காள தேசமாக மலர்ந்தது.

இதனைத் தொடர்ந்து மேற்கு வங்காளம் பிரிவினை கேட்கவில்லை, போராட்டமும் நடத்தவில்லை. இலங்கையில் தமிழ்மக்களுக்கு அவர்களுடைய தாயகத்தில் சுயாதிபத்தியமுறை அரசு அமைப்பதால், இந்தியாவுக்கு என்ன நஷ்டம் வந்துவிடப்போகிறது. தமிழ் நாட்டுமக்கள் சினிமா நட்சத்திரங்களுக்குக் கொடிபிடிப்பவர்களே

**எஸ்.எம்.ஜி.**

யொழிய, இந்திய மத்திய அரசுக்கு எதிராகக் கொடிபிடிப்பவர்களல்லர் என்பதை இந்திய அதிகார வர்க்கம் இன்னும் உணரவில்லையே.

தமிழ்நாட்டு மக்களுக்குத் தமிழ் உணர்ச்சியும், விடுதலை உணர்வும் இருந்தால் வைகோவும், நெடுமாறனும் ஏன் என்று கேட்பார் இல்லாமல் சிறைகளில் வாடிக்கொண்டிருப்பார்களா?

இந்தியாவின் நலன் பாதுகாக்கப்படவேண்டுமென்பதற்காக இலங்கையில் தமிழ்மக்கள் அழித்து ஒழிக்கப்பட வேண்டும் என்று இந்தியா விரும்புகிறதா?

இந்தியாவிலுள்ள வெளிப்பாட்டை மகிந்த வெளிப்படுத்தியிருக்கிறார். "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்று சரியாக இந்திய நிலைப்பாட்டை சம்பவப்படுத்தியிருக்கிறார்.

மகிந்தவுக்கு நன்றி சொல்ல வேண்டும் தமிழ்மக்கள்!

# சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எமது ஆலோசனையும் பெறப்படும்

## கிளிநொச்சி சந்திப்பின் பின் சம்பந்தன் கருத்து



சம்பந்தன்

"எதிர்காலத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் சமஷ்டி தொடர்பான விடயங்கள் ஆராயப்படும்போது, எங்களுடன் பேசி; அந்தவிடயங்கள் சம்பந்தமாக எங்களுடைய ஆலோசனைகளும் பெறப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என எமக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்" என நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நடைபெற்ற சந்திப்புக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றியும், பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது. விசேடமாக முஸ்லிம் மக்கள் சம்பந்தமாக இந்தப் பேச்சுவார்த்தையில் அணுகவேண்டிய நடைமுறைகள், முடிவுகள் பற்றி இச்சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் கருத்துக்கள் கேட்கப்பட்டு, இவ்விடயம் சம்பந்தமாக மிகவும் ஆழமானதும், விரிவானதுமான ஆலோசனைகள் இடம்பெற்றன.

முஸ்லிம் மக்களை நாம் அரவணைத்துச் செல்லவேண்டும். வட-கிழக்குப் பிராந்தியத்தின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முஸ்லிம் மக்களின் ஒத்தழைப்பையும் - அவர்களுக்கு நியாயம், நீதி வழங்க வேண்டும் என்பதையும் இச்சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் பரிபூரணமாக ஏற்றுக்கொண்டுள்ளது எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன், தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மிகவும் நிதானமான ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது எனத் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் எமக்குத் தெரிவிக்கப்பட்டது எனவும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், எமக்கும் இடையில் நடைபெற்ற இச்சந்திப்பு மிகவும் சுமுகமாகவும், சிநேகபூர்வமாகவும் நடைபெற்றது எனவும்- தெரிவித்தார். (ல!)

# புரிந்துணர்வு உடன்பாட்டில் திருத்தம் செய்ய வேண்டும்!

## சரத் அமுனுகம தெரிவிப்பு

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறுவதாக, ஒருவர்மீது ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதால் புரிந்துணர்வு உடன்பாட்டைத் திருத்துவது அவசியம் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் அமுனுகம தெரிவித்தார்.

லங்கா சமசமாஜக் கட்சித்தலைவர் பட்டி வீரக்கோனும் இதையேதான் கூறுகின்றார். இருதரப்பும் ஒருவர்மீது ஒருவர் குற்றஞ்சுமத்திக் கொண்டிருப்பதால் சமாதானப் பேச்சுக்கள் பாதிப்படையும்.

சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்கம் எமக்குக் கிடையாது. மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. எமது போராட்டங்களை அரசாங்கம் தவறாகப் பிரசாரப்படுத்த முனைகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# கணினிக் கருத்தரங்கு யாழ்.மத்திய கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் கணினிப் பயிலுநர்களும், முறைசாரக் கல்விப்பிரிவினரும் இணைந்து 'கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' கணினிப் பத்திரிகையின் - ஆதரவில் நடத்தும் ஒருநாள் கணினிக் கருத்தரங்கு நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றுவோருக்குப் பெறுமதிமிக்க சான்றிதழ், பாட விளக்கக் குறிப்புக்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன், கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகள், புத்தகங்கள் மற்றும் கம்பியூட்டர் மென்பொருட்களும் - காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

# எயிட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கைகள்; 18 திட்ட உத்தியோகத்தர்கள் நியமனம்!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் இத்திட்டம் குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள 18 திட்ட உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பாடசாலைகள், அரச திணைக்களங்கள், சனசமூக நிலையங்கள் தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகள், விடியோப் படங்கள், மற்றும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றனர்.

இதுவரை இவர்கள் நடாத்திய கருத்தரங்குகளால் பத்தாயிரம் பேர் பயன்பெற்றுள்ளதாக மதிப்பீடுகளிலிருந்து தெரியவருகின்றது. (ச)

# கடற்படைப் படகுகள் மோதினால் மீனவர்களே அதற்குப் பொறுப்பாம்!

வடமராட்சி கடற்பரப்பில் கடற்தொழிலுக்குச்செல்லும் மீனவர்களிடம் கையொப்பம்பெறும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுவருவதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள், வெளிச்சமின்றிக் கடற்தொழில் செய்யும் வேளைகளில், கடற்படையினின் படகுகள் மோதினால் அதற்கு மீனவர்கள்தான் பொறுப்பு என்று கையொப்பம் பெறப்படுவதாகத் தெரியவருகின்றது.

கடந்த சிலதினங்களாகக் கடற்தொழிலுக்குச் செல்வதற்காகப் பாஸ் எடுக்கச் செல்லும்போதே இந்தக் கையொப்பம் பெறப்படுகின்றது.

படையினர் எதற்காகக் கையொப்பம் பெறுகின்றனர் எனத் தெரியாது மீனவர்கள் கையொப்பம் வைப்பதாகவும், இதுதொடர்பாகப் படை உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, படையினர் மேற்கொண்டுவரும் இந்த நடவடிக்கையைத் தடுத்துநிறுத்துமாறு தாம் கோரவிருப்பதாகவும் வடமராட்சிக் கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.(ச)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanadu.com

சிந்தனைக்கு
காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது.
திருக்குறள்

# நமது நோக்கு

## உதவிகள் உடனடியானவையே!

இலங்கையின் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட - கிழக்குப் பகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்போவதாகவும்,

இடம்பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றம் உட்பட போரின் பாதிப்புக்களை நீக்கி, மக்களை சுமுக வாழ்வுக்கு இட்டுச்செல்ல உதவப்போவதாகவும் - சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், மனித நேய அமைப்புக்களும் அறிவித்தன.

ஆனால் - அறிவித்த வேகத்திற்கு அல்லது எதிர்பார்க்கப்பட்டவளவிற்குச் சாதகமாக - அறிவிப்புக்களைச் செயற்படுத்துவதில் - அவற்றினால் முன்னேற்றம் எட்டப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதாகவே இருந்துவருகின்றது.

அமைதிச் சூழல் ஏற்பட்டு ஒருவருடம் கடந்த நிலையிலும், இந்தத் தாமதம் நீடித்து வருவதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் - புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய பின்னடைவென்பது- மக்களிடம் சுமுக வாழ்வைத் தோற்றுவிப்பதில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுப் பணிகளுக்கான உபகுழு செயற்படத் தொடங்கினாலும் - அச்செயற்பாட்டுக்கு ஆதாரமாக இருக்கவேண்டிய நிதியைத் தருவதில் ஏற்படும் தாமதம், உபகுழுவின் இலக்குகளுக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கின்றது என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

புனரமைப்பு, புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு உதவுவதற்கு சர்வதேச நிதிநிறுவனங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் - தமக்கென வழிமுறைகளையும், ஒழுங்குவிதிகளையும் கொண்டிருக்கும் அடிப்படையிலேயே தமது செயற்பாடுகள் அமையும் எனக் கூறுமிடத்து - யுத்தத்தின் பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கான உடனடிப் பணிகள் என்றவகையில் - இந்த வழிமுறைகளிலும், ஒழுங்குவிதிகளிலும் துரிதம் தேவை என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

உண்மையில் - கடந்த ஒரு வருடத்திலும் மக்களை இயல்பு வாழ்க்கைக்கு இட்டுச்செல்வதற்கான குறிப்பிடத்தக்க திட்டங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படாத நிலையிலும்,

செயற்பாடுகள் தொடங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்ட சில திட்டங்களும் இழுத்தடிப்புக்குள்ளாக்கப்பட்டுவரும் சூழலிலும் -

பாதிக்கப்பட்ட மக்கள் இவற்றின் பேரில் - சலிப்பையும், ஏமாற்றத்தையுமே வெளிப்படுத்துகின்றனர் என்பது வெளிப்படையானது.

எனவே - போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புதிய வாழ்வைப் பெற்றுத்தருவதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் துரிதமாக இயங்கவேண்டும் என்பதோடு,

வட - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் - வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுப் பணிகளுக்கான உபகுழுவின் (சிறான்) செயற்பாடு வேகம் கொள்வதற்குத் தகுந்த நிதியீட்டங்கள் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும் என்பதும் மிக முக்கியமான வேண்டுகையாக மக்களால் முன்வைக்கப்படுகின்றது.

முதலில் ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட எதிர்பார்ப்புக்கள் - இப்போது ரோக்கியோ மாநாடுவரை பின்தள்ளிப் போயிருக்கின்றன.

அதேவேளை - சர்வதேச நிதி நிறுவனங்களினதும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் மற்றும் உயர் தலைவர்களின் 'விஜயங்களும், கலந்துரையாடல்களும் - அடிக்கடி நிகழ்ந்தும் வருகின்றன.

முதலில் - பத்திரிகைகளிலும், செய்திகளிலும் இவர்களின் விஜயங்கள் - நிறைந்த எதிர்பார்ப்புடன் முக்கியத்துவமளிக்கப்பட்டு வந்ததும், இன்று - தினந்தோறும் நடக்கும் விஜயங்களாக இவை சாதாரண நிகழ்வாகப் போய்விட்டன.

இவ்வகையில் - இவை அனைத்தும் நடந்தேற, கிடைத்த பலாபலன்களோ சொல்லும்படியாகக் கொஞ்சமும் இல்லையென்பது வருத்தத்திற்குரிய விடயமே.

இந்தவகையில் - பல ஆண்டுகளாகப் போருக்குள்ளேயே வாழ்ந்த மக்களுக்கும், அடிப்படை வசதிகளையே தொலைத்தவர்களுக்கும் - தேவையானது நீண்ட வழிமுறைகளும், மதிப்பீடுகளுமல்ல - உடனடியான நிவாரணமே, உதவிகளே என்பதை உதவிசெய்ய முன்வருபவர்கள் புரிந்துகொள்ள வேண்டும், செயற்பட வேண்டும். அதுவே உதவிகளுக்கான உண்மையான அர்த்தமாகவும் இருக்கும்.

# போகிற போக்கில்......



மார்ச் 8... மகளிர் அமைப்புக்களுக்கு மிகவும் உற்சாகமான நாள். மகளிர் உரிமைக்கான நாள். இலங்கையில் பல மகளிர் அமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால், இவற்றுள் எத்தனை மகளிர் அமைப்புக்கள் பெண்களின் நல்வாழ்வுக்காகக் குரல்கொடுத்துள்ளன என்றால் விரல் விட்டு எண்ணிவிடலாம்.

வெளிநாட்டு நிதியில் இயங்கும் இந்த மகளிர் அமைப்புக்கள், நட்சத்திர ஹோட்டல்களிலேயே தங்கள் கூட்டங்களையும், செயற்திட்டங்களையும் வகுத்து வருகின்றன. இந்த மகளிர் அமைப்புக்களில் உயர் பதவிகளில் இருப்பவர்கள் உயர்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் வாழ்க்கை முறைகள் வேறுபட்டவை. சாதாரண பெண்களின் பிரச்சினைகளையோ, அவர்களுக்குச் சமுதாயத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியோ இவர்களால் புரிந்துகொள்ளமுடியாது. தமது பிரபல்யத்திற்காகப் பத்திரிகைகளில் அறிக்கைகளையும் விட்டு விடுவார்கள், புகைப்படங்களையும் பிரசுரிப்பார்கள்.

இவர்களின் செயற்பாடுகள் பற்றிச் சாதாரண பொதுமக்களுக்கு எதுவுமே தெரிவதில்லை. அவர்களால் தெரிந்துகொள்ளவும் முடியாது. A.C அறைக்குள்ளும், உயர்தர மண்டபங்களுக்குள்ளும் நடைபெறும் கூட்டங்களுக்குச் சாதாரண பெண்களால் செல்லமுடியுமா? அவர்களது பிரச்சினைகளைத்தான் சொல்லமுடியுமா?

இலங்கையில் தொடர்ந்து பெண்கள் பாதிக்கப்பட்டு வரு

## கொழும்பிலிருந்து உதரன்

கின்றார்கள். சிறுமிகள் முதல் வயது முதிர்ந்த பெண்கள்வரை பாலியல் வல்லுறவுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் உள்ளாகப்படும் பெண்களைப் பற்றிப் பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வருகின்றன.

இதனைத் தடுக்க எத்தனை மகளிர் அமைப்புக்கள் குரல்கொடுத்துள்ளன என்றால் விரல்விட்டு எண்ணிவிடலாம். அரசுக்கு- மகளிர் அமைப்புக்கள் ஒன்றிணைந்து அழுத்தம் கொடுத்தால், பெண்களுக்கு எதிரான கொடுமைகளைத் தடுக்க அரசு விசேட சட்டங்களைப் நாடாளுமன்ற ஆதரவுடன் கொண்டுவரமுடியும். இதனை மகளிர் அமைப்புக்கள் செய்தனவா?

பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகியவர்களைப் பொலிஸார் கைதுசெய்து, சட்டத்தின் முன்நிறுத்தும்போது குற்றவாளிகளுக்காகச் சட்டத்தரணிகள் வாதாட வருகின்றனர். இவர்களை வாதிடவிடாமல் தடுக்கவாவது மகளிர் அமைப்புக்கள் போராடினவா? இல்லையே.

தலைநகரில் பல்வேறு பெயர்களில் இயங்கும் மகளிர் அமைப்புக்கள் தமது செயற்றிட்டம் பற்றிப் பக்கம் பக்கமாக அறிக்கைகளைத் தயாரித்து, பல்வேறு நாடுகளிலுள்ள சமூக அமைப்புக்களிடம் கோடிக்கணக்கில் பணத்தைப் பெற்றுவருகின்றன. இப்பணம் பாதிக்கப்பட்ட பெண்களின் மறுவாழ்வுக்குப் பயன்படுகின்றனவா? சிந்திக்கவேண்டிய கேள்வியிது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு - கிழக்கில் எத்தனை பெண்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பது உலகறியும். விதவைகளாக்கப்பட்ட பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற விபரங்கள் இந்த மகளிர் அமைப்புக்களிடம் இருக்கின்றதா?

கணவன்மாரை இழந்து தவிக்கும் விதவைப் பெண்களுக்கு எத்தனை மகளிர் அமைப்புக்கள் உதவிசெய்துள்ளன? இந்த மகளிர் அமைப்புக்களுக்கு மார்ச் 8 ஆம் திகதி மட்டும் மறக்காமல் நினைவுக்கு வந்துவிடும்.

அண்மையில் மகளிர் அமைப்பு ஒன்றில் அங்கத்தவராக உள்ள ஒரு பெண்மணி, மேலைத்தேய டிஸ்கோ நடன வகுப்புக்குச் சென்று வந்துகொண்டிருந்தார். அந்த நடன வகுப்பை நடத்துபவரிடம் - இந்தப் பெண்மணி எதற்காக வருகின்றார் என்பதை எனக்குத் தெரிந்த பெண்மணி ஒருவர் ஊடாக விசாரித்தேன்.

மகளிர் அமைப்பில் அங்கத்தவராக இருப்பதால், அடிக்கடி ஒன்றுகூடல் நிகழ்ச்சி நடக்குமாம். அதில் நடனமாட வேண்டுமாம். பரதநாட்டியம் என்று நினைத்துவிடாதீர்கள். குளிர்பானத்துடன் கூடிய மேலைத்தேய நடனம்தான். எப்படி இருக்கிறது தலைநகரில் தலைமையகத்தைக் கொண்டுள்ள மகளிர் அமைப்புக்களின் செயற்பாடுகள்.

இது இவ்வாறிருக்க, இலங்கையில் இயங்கும் தனியார் வானொலிகளும், தொலைக்காட்சிகளும் மகளிர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடிவருகின்றன.

தனியார் வானொலிகளுக்கு - இந்தியச் சினிமாப் பாடல்கள் இல்லையாயின், வானொலி நிலையத்தையே மூடிவிட வேண்டியநிலைதான் உள்ளது. இவ்வானொலி நிலையங்கள் வருமானத்திற்காக இந்தியச் சினிமா நடிகைகளையும், கவர்ச்சி நடனத்தாரகைகளையும் அழைத்துவந்து நடன நிகழ்ச்சிகளை நடத்தி, பணம் சம்பாதித்து வருகின்றன. இந்த வானொலி நிலையங்கள்தான் மகளிர் தினத்தைக் கொண்டாடுகின்றன. மகளிருக்கு எப்படி முக்கியத்துவம் கொடுக்க வேணடும், அவர்களது உரிமைகளை எப்படிப் பாதுகாக்கவேண்டும் என்பது பற்றிய சமூக அக்கறையே இல்லாத இந்த தனியார் வானொலிகள், மகளிர் தினத்தைக் கொண்டாடுவது வேடிக்கையாக இருக்கிறது.

நமது நாட்டில் தான் தமிழரின் விடிவுக்காய்ப் போராடிய வீரப் பெண்மணிகள் இருக்கின்றார்கள் என்பதையே மறந்து விடுகின்றன.

இந்திய ஆபாசப் பாடல்களையே ஒலிபரப்பும் தனியார் வானொலிகளுக்கு, மகளிர் தினத்தைக் கொண்டாட அருகதை இருக்கிறதா?

தனியார் வானொலிகள் இப்படி என்றால், தனியார் தொலைக்காட்சிகளைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. பெண்களைப் போகப்பொருளாகப் பயன்படுத்தியே வியாபாரம் செய்யும் தொலைக்காட்சிகள் மகளிர் தினத்திற்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றன.

சமூகத்தைச் சீரழிக்கும் சின்னத்திரை - மெகா தொலைக் காட்சித் தொடர்களை ஒளிபரப்பி, சமூகத்தையே அழிவுப் பாதைக்கு அழைத்துச்செல்லும் இவர்கள், மகளிர் தினத்தைக் கொண்டாடுவது வேடிக்கையானது.

தனியார் தொலைக்காட்சிகள் ஒளிபரப்புச்செய்யும் விளம்பரங்கள் எவ்வளவு ஆபாசமானவை என்பதை எவருமே புரிந்துகொள்வதில்லை. இப்படியான ஆபாச விளம்பரங்களைத் தடைசெய்ய, போராட்டத்தை நடத்த எந்த மகளிர் அமைப்பாவது இதுவரை முன்வரவில்லை.

தனியார் தொலைக்காட்சிகள் ஒளிபரப்புச்செய்யும் திரைப் படங்களில் வெளிவரும் ஆபாசக் காட்சிகளைத் தணிக்கை செய்ய, நடவடிக்கை எடுக்க எந்த மகளிர் அமைப்பும் இன்றுவரை முன்வரவில்லை. தொலைக்காட்சியைச் சிறுவர் முதல் பெரியோர்வரை பார்க்கின்றார்கள். எனவே, தொலைக்காட்சிகளுக்குச் சமூகப்பொறுப்பு இருக்கவேண்டும். இருப்பதாகத் தெரியவில்லை. சமூகப் பொறுப்பில்லாத தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மகளிர் தினத்தைக் கொண்டாட உரிமை இருக்கிறதா?

பெண்களின் தொப்பிள் காட்டும் பம்பரப் பாடற்காட்சிகளை ஒளிபரப்புச்செய்யும் தொலைக்காட்சி நிலையங்கள், மகளிருக்காகக் குரல் கொடுப்பதாகத் தம்மைக் காட்டிக் கொள்கின்றன.

இதற்கு எதிராகக் குரல்கொடுக்க மகளிர் அமைப்புக்கள் முன்வருகின்றனவா? மகளிர் தினத்திற்கு வாழ்த்துச் செய்திகளையும், அறிக்கைகளையும் விடும் மகளிர் அமைப்புத் தலைவிகளுக்கு, மேற்குறிப்பிட்ட நிகழ்வுகள் கண்களுக்குத் தெரிவதில்லை.

வெளிநாட்டுச் சமூக அமைப்புகளுக்குத் தமது சாதனைகளைப் பட்டியலிட்டு, அறிக்கை தயாரித்து, பணம் திரட்டும் மகளிர் அமைப்புக்கள் - மகளிர் தினத்திலாவது சிந்திப்பார்களா? பெண்களுக்காகக் குரல்கொடுப்பார்களா? பெண்களுக்கு எதிராகச் செயற்படும் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களுக்கு எதிராகப் போராடுவார்களா? அல்லது நட்சத்திரக் ஹோட்டல்களில் அமர்ந்துகொண்டு அறிக்கை மட்டும் விடுவார்களா? காலம்தான் இவர்களை மாற்றவேண்டும்.

# நிவாரண விநியோகத்துக்கு உள்ளூரில் அரிசியை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் ஆரம்பம்!

குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்துக்கு வழங்கப்படவென, அரிசியை உள்ளூரில் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

உலர் உணவு நிவாரணத்துக்கு வழங்குவதற்கான அரிசி- முன்னர் தென்பகுதியிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டது. இதனால், 31 ரூபா முதல் 34 ரூபாவுக்கு ஒரு கிலோ அரிசியை விநியோகிக்க வேண்டியிருந்தது.

இதைவிட அண்மையில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரசியில் எடை குறைவு காணப்பட்டதால், பிரதமர் உள்ளூரில் அரிசியைக் கொள்வனவு செய்து விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதற்கமையக் கூட்டுறவுச்சங்கங்களே அரிசியை உள்ளூரில் கொள்வனவுசெய்து, உலர் உணவு நிவாரணத்துக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான ஆரம்ப முயற்சிகளில் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன.

இதன்படி, வன்னியில் கொள்வனவு செய்யப்படும் அரிசியை 28 ரூபாவுக்குள் விநியோகிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூரில் கொள்வனவு செய்யப்படும் அரிசியின் விலையைக் கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிச்சையாகத் தீர்மானிக்க முடியாது என்றும், யாழ்.அரச செயலகம் நியமிக்கும் விலை நிர்ணயக் குழுவொன்றே அரிசியின் விலையைத் தீர்மானிக்கும் என்றும் தெரியவருகின்றது.

# கோப்பாய், நீர்வேலி தரவைகளில் கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள், பொறிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கோப்பாய், நீர்வேலி தரவைப்பகுதிகளில் 1995 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட முன்னரங்கநிலைகள், படையினரால் கைவிடப்பட்ட பின்னரும் இப்பகுதிகளில் இருந்த மிதிவெடிகள் அகற்றப்படவில்லை.

பின்னர் 2000 ஆம் ஆண்டில் மீண்டும் இப்பகுதியில் படையினரின் முன்னரங்கநிலைகள் அமைக்கப்பட்டதுடன், அப்பகுதியில் பெருமளவிலான வெடிபொருட்களும் புதைக்கப்பட்டன. படையினர் இப்பகுதி முன்னரங்கநிலைகளைக் கைவிட்டபோதும், இதுவரை இப்பகுதியில் உள்ள மிதிவெடிகள், வெடிபொருள்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதனால், இப்பகுதியில் பலர் கால்களை இழந்ததுடன், கண்ணிவெடிகளில் சிக்கிப பெருமளவு கால்நடைகளும் கால்களை இழந்துள்ளன.

கடந்த இருவாரங்களாக இந்தப் பகுதிகளில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் முயற்சியில் 'ஹலோ ட்ரஸ்ட்' அமைப்பின் தொண்டர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

# ஊடகங்கள் - ஊடகவியலாளர்கள்

சந்திரிகாவும், ரணில் விக்கிரமசிங்காவும் தொடர்ந்து முறுகல்களுக்கு மத்தியில் தமது அரசியலை நடத்திச் செல்கின்றனர். ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச் செல்லும் போது, இலங்கையின் அரசியலில் ஐக்கிய தேசிய முன்னணியும், பொது



நாட்டைக் காக்கும் எதிர்க்கட்சிகளின் முன்னணியின் கூட்டத்தில் சரத் அமுனுகம, அநுரா பண்டாரநாயக்க, விமல் வீரவன்ஸ, மங்கள சமரவீர.

ஜன ஐக்கிய முன்னணியும் இணைந்தே செயற்படுவதாகக் கூறி வருகிறார். எனினும், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தற்போது இணைந்து போகாத கொள்கையுடன் இருக்கும் இந்தியாவிடம் மாத்திரம், இலங்கை அரசாங்கக் கட்டமைப்புக்குள் விரிசல் இருப்பதாகக் காட்டிக்கொள்கிறார்.

அண்மையில் கோலாலம்பூரில் நடைபெற்ற அணிசேரா இயக்க நாடுகளின் மாநாட்டிலும் ஜனாதிபதி- இந்திய பிரதம மந்திரி அடல் பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்து ரணில் விக்கிரமசிங்கவின் அரசைப்பற்றிக் குறை கூறியமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. ஜனாதிபதியின் இந்த நிலைப்பாடு, இந்தியாவைப் பொறுத்த வரையில் சாதகமாகவே பல சந்தர்ப்பங்களில் அமைந்திருக்கிறது அல்லது அமைந்து விடுகிறது. மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் அரசும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் வளர்ச்சியை எந்த வகையிலாவது தடுக்கவேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டுக் கொண்டிருப்பதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி கூறுகிறது. இதில் முதற்கட்டமாகப் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வெளிப்படையாக ஆதரவை வழங்கும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் தரவுகளை, அரசாங்கம் சேகரித்து வருகிறது. இதில் சுமார் 20 ஊடகவியலாளர்களும், இரண்டு அல்லது மூன்று ஊடகங்களும் அடங்குகின்றன. சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்கள் - பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான புதிய உறவு குறித்துக் கூடிய பிரசாரங்களைக் கொடுத்து வருகிறார்கள் என ஐக்கிய தேசிய முனனணி எண்ணுகிறது.

இதன் காரணமாகத் தமது முன்னணிக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ? என்ற அச்சம் அதற்கு ஏற்பட்டுள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் குற்றம் சுமத்துகின்றன.

அதேநேரம், குறிப்பிட்ட ஊடகவியலாளர்கள் - சமாதான முன்னெடுப்புக்கு எதிரான கருத்துக்களையும் பரப்பி வருவதாக ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் தமிழ்க் கட்சிகளால் குற்றம் சுமத்தப்படுகின்றனர். இவர்களைப் பயன்படுத்திக் கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் தமது பிரசாரங்களைத் தீவிரப்படுத்தியுள்ளன. நாட்டைத் தாரைவார்க்கும் ரணில், மிலிந்த, ஜி.எல். பீரிஸ் ஆகியோரைத் தோற்கடிப்போம் என மக்கள் விடுதலை முன்னணி மேற்கொண்ட பேரணியின் போது, சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களின் பங்கு அளப்பரியதாகவே இருந்ததாக ஐக்கிய தேசிய முன்னணி கூறுகிறது.

இதற்கு மாற்று நடவடிக்கையாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி- புதிய ஊடகவியலாளர் அமைப்பை உருவாக்கியுள்ளது. இதன் முதலாவது கூட்டம் நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்டது. இதில் நடைமுறை அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களைத் தீவிரப்படுத்துவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மகுடம் வைத்தாற்போல, அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்த தகவல் ஒன்று இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

நடைமுறை அரசியல் நகர்வின் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்துக் கடந்தவாரம் கண்டியில் பொது ஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவாக்கல் நிகழ்வு ஒன்றை நடத்தியது. இதன்போது கருத்துரைத்த அநுரா பண்டாரநாயக்க- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் தனியான இலத்திரனியலியல் ஊடகம் தேவை என்பதை வலியுறுத்தினார்.

தமிழ் நாட்டில் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் தனியாகவும், கலைஞர் கருணாநிதிக்குத் தனியாகவும் இலத்திரனியல் ஊடகங்கள் இருக்கின்றன. இதன் காரணமாக அந்த அரசியல்வாதிகள் தமது பிரசுரங்கள் குறித்துக் கவலைப்படுவதில்லை. இது இலங்கையைப் பொறுத்தவரையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குப் பொருத்தமான எடுகோளாகும். இலங்கையில் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தபோதும், தற்போதும் எந்த ஒரு இலத்திரனியல் ஊடகமும் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சிக்கு ஆதரவளிக்கவில்லை. (அரசாங்க ஊடகங்களைத்தவிர) எனவே- ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குத் தனியான இலத்திரனியல் ஊடகம் ஒன்றை ஸ்தாபிப்பதன் மூலம் கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அனைத்துப் பிரசாரங்களையும் முறியடிக்க முடியும் என அநுரா பண்டாரநாயக்க குறிப்பிடுகிறார்.

இதனைச் சம்பந்தப்பட்ட நிகழ்வில் பங்குகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டபோது, அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் எவ்விதக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. இதே வேளை, இரண்டு கட்சிகளும் தனித்தனியே தமது தேர்தல் நோக்கிய நகர்வுகளை முனைப்புப்படுத்தி வருகினறன.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்கனவே மக்கள் விடுதலை முன்னணியை நம்பிக் கூட்டணி ஒன்றுக்கான முன்னெடுப்பில் இறங்கி விட்டது. எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றிவிடவேண்டும் என்ற நோக்கம் அதற்கு ஏற்பட்டுவிட்டது. அதன் காரணமாகவே கட்சிக்குள் எவ்வித மாற்றுக் கருத்துக்களுக்கும் அந்தக் கட்சியின் தலைமை அசைந்து கொடுக்க மறுத்துவருகிறது.

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில், இரண்டு கூட்டணிக் கட்சிகளும் இணக்கம் ஒன்றை எட்டிவிட்டன எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் அவ்வப்போது கூறிவருகின்றன. எனினும், அந்த இணக்கம் எது

## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

# எதிரணியின் புதிய யுத்தமுனை

வென்பதை அந்தக்கட்சிகள் இது வரை வெளியிடவில்லை. "சமஷ்டி தீர்வை" இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மூலமாக ஏற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவித்த பொதுஜன ஐக்கிய முன்னணி - அதனை மக்கள் விடுதலை முன்னணி ஏற்றுக் கொண்டதா? என்பதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

இது தொடர்பில் இரண்டு கட்சிகளும் இறுதித் தீர்மானத்தை விரைவில் எடுக்கும் என தெரிவிக்கப்பட்டபோதும், இதுவரை அந்த தீர்மானம் எடுக்கப்படவில்லை. எனினும், இந்தமாத இறுதியில் இரண்டு கட்சிகளும் கூட்டணி ஒன்று தொடர்பான இறுதி இணைக்கத்தைப் பூர்த்தி செய்யப்போகின்றன என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியைவிட, பொதுஜன ஐக்கய முன்னணியிடம் உரிய கொள்கை எதுவுமில்லை என்பது பிந்திய நிலைத் தகவலாகும்.

வழமையாக, ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கொழும்பில் நடைபெறும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது, இந்த விடயம் வெளியானது. இனப்பிரச்சினைக்குத தீர்வாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி என்ன தீர்வை முன்வைக்கப்போகிறது என ஊடகவியலாளர்கள் கேட்டபோது, முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம, இதுவரை தெரிவித்த கருததுக்களுக்கு மாறான கருத்தை வெளியிட்டார். அதாவது, பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் ஆட்சியமைத்த பின்னரே அந்தத் தீர்வை வெளியிடமுடியும் என அவர் குறிப்பிட்டார். இதிலிருந்து எதிர்காலக் கூட்டணி அரசாங்கமும் தமிழ் மக்களை ஏமாற்றப் போகிறது என்ற விடயம் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

சரத் அமுனுகமவின் கருத்தின்படி - கூட்டணி தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இணக்கம் ஒன்றை எட்டவில்லை என்றே தெரியவருகிறது. அதேநேரம் மக்கள் விடுதலை முன்னணி- பொதுஜன ஐக்கிய முன்னணியின் 2000 ஆம் ஆண்டுத் தீர்வுப் பொதியை ஏற்றுக்கொள்வதானால், காலநிபந்தனைகளை அந்த முன்னணி ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறியிருந்தது. அதற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஏற்றுக் கொண்டிருந்தது.

இருப்பினும், இந்த இரண்டு கட்சிகளும் தற்சமயம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறையை வெளியிடாமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கிலேயே கூட்டணியை அமைத்து வருவது இதிலிருந்து புலனாகிறது.

இது இவ்வாறிருக்க- இந்தக் கூட்டணி, நாளை திங்கட்கிழமை கொழும்பில் நடத்தவிருக்கும் பேரணியைப் பொறுத்தே, இரண்டு கட்சிகளும் அடுத்தகட்ட நகர்வை முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்கிறது. எனவே அதனைத் தடுக்கும் வகையில், "நாட்டைக் காக்கும் எதிர்க்கடசிகளின் முன்னணி" என்ற அமைப்பின் மூலம் இந்தப் பேரணியை நடத்துவதாக அந்த முன்னணியின் அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

பேரணியில் சுமார் 10 இலட்சம் பேரைப் பங்குகொள்ள வைக்கப் போவதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி முதலில் அறிவித்தது. எனினும், தமது கட்சியினால் 10 இலட்சம் பேரைத் திரட்ட முடியுமா? என்ற சந்தேகம் ஏற்படவே, பொது ஜன ஐக்கிய முன்னணி- இந்தப் பேரணியில் மக்கள் விடுதலை முன்னணியையும் பங்குகொள்ளுமாறு அழைப்புவிடுத்தது. மக்கள் விடுதலை முன்னணிக்கு - பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து, பேரணியில் பங்குகொள்வதில இசைவு தெரிவிக்காத போதும், நடைமுறைக் கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதைக் கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட பேரணியில் பங்குகொள்வதற்கு மக்கள் விடுதலை முன்னணி இணங்கியது.

இதனடிப்படையில், நாளைய தினம் இடம்பெறவிருக்கும் பேரணி, எதிர்பார்த்த சனக்கூட்டத்தைக் கொண்டிருக்குமானால், அது சம்பந்தப்பட்ட இரண்டு கட்சிகளும் முன்னெடுத்துள்ள கூட்டணியின் எதிர்காலத்தை வளம்பெறச் செய்வதாக அமையும். எதிர்பார்த்த சனத்திரள் பேரணியில் பங்குகொள்ளாவிட்டால் - புதிய கூட்டணிக்கு அது விமர்சனமாக அமைந்துவிடும். எனவே இதனைத் தவிர்ப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணியைவிட, பொதுஜன ஐக்கிய முன்னணியே தீவிர ஆட்திரட்டலில் ஈடுபட்டுள்ளது. இதே வேளை, ஐக்கிய தேசியக் கட்சியும் வேலை நிறுத்தங்கள் மற்றும் சவால்களுக்கு மத்தியில் தமது கட்சியைப் பலப்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருகிறது. வேலைவாய்ப்புக்களுக்கான உத்தரவாதம் என்பதுடன், எஸ்.பி.திஸநாயக்க, ஜி.எல்.பீரிஸ் ஆகியோரைக் கட்சியில் உறுப்பினர்களாக்குவதும் இதன ஒரு முனைப்பாகவுள்ளது. ✳

# எடுப்பதும் கொடுப்பதும் இறைவனின் செயல்
# அவனுக்கு நம்மை அர்ப்பணிக்க தயாராவோம்

சர்வமதங்களில் இன்று காணிக்கை என்னும் சொல் அனைவருக்கும் பொதுவான மொழியாகக் கருதப்படுகின்றது.

அவரவர் தமது வசதிப்படி பொருளாகவோ அல்லது பணமாகவோ நன்றியுடன் கூடிய தமது காணிக்கையை இறைவனுக்கு அர்ப்பணிக்கின்றனர்.

மோசேயின் சட்டப்படி, அன்று ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும் வழக்கம் இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்ற வேண்டியநாள் வந்தபோது, குழந்தை யேசுவை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க, அவரை ஜெருசலேமுக்குக் கொண்டுசென்றார்கள். ஏனெனில், "ஆண் தலைப்பேறனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும் என்று திருச்சட்டத்தில் எழுதியுள்ளது."

அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு, இரு மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது. (லூக்கா - 2:22 - 25)

"இயேசுகிறிஸ்து தொடக்கமும், முடிவுமாக - அகரமும் நகரமுமாக, அனைத்துலக அரசனாக, மீட்பராக இருக்கின்றார். வரலாற்றில் வரையறுக்கப்படாத இரகசியமாக உள்ள அவர், நம் அனைவரின் வாழ்வின் வளமாக உள்ளார்."

நமது மையமாக உள்ள அவர் "விண்ணிற்கும், மண்ணிற்கும் வியக்கத்தக்க பாலமாக உள்ளார். பெண்களில் அதி சிறந்தவரான மரியாளின் மாசற்ற புதல்வரான நம் மீட்பர்- அனைத்திற்கும் ஆதிகாரணமாய் இருக்கின்றார்" - என்று ஆறாம் சின்னப்பர் கூறுகின்றார்.



இறைமகன் இயேசு ஆலயத்தில் காணிக்கையாக்கப் படுகின்றார். சிமியோனும், அன்னாவும் இயேசுவைக் கண்டு மகிழ்வுறுகின்றனர். முதன் முதலாகப் பொது இடத்திற்குக் கொணடு வரப்பட்ட இயேசு, நமக்குப் புகட்டும் பாடங்களில் சிறப்பானது மூன்று.

1.தான், அனைத்தையும் படைத்தவரானாலும், சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறார்.


2.தான், உலகமாந்தர் அனைவரது பாவங்களுக்குப் பரிகாரப் பலியாக, உலகமீட்பராக உள்ளதையும் நிரூபிக்கிறார்.

3.இவ்வுலக மதிப்பீடுகளின்படி தன் வாழ்வை அமைத்துக் கொள்ளாத இயேசு- தன்தந்தையின் மதிப்பீடுகளின்படி வாழ்ந்ததால், உலகின் கண்களுக்கு எதிர்க்கப்படும் அறிகுறியாகத் திகழ்ந்தார்.

மனம்போன போக்கில் வாழாமல், பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஒன்றுகூடி - குடும்பமாக, வல்ல நம் ஆண்டவரின் உண்மை வாரிசுகளாகக் கிறிஸ்துவைச் சந்திக்க இறைவனின் இல்லம் சென்று, எம்மையே நாம் காணிக்கையாக அர்ப்பணிக்க ஆயத்தம் ஆவோம்.

சி. என். ஹெய்ன்ஸ்


ICC Cricket World Cup
SOUTH AFRICA 2003



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## நினைத்ததை ,, நடத்தியே முடிப்பவன்



அரவிந்த - லீக்கு ஒரு பாடம்

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான SUPER SIX முதலாவது ஆட்டம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. ஏனெனில், அண்மைக் காலத்தில் ஏறுவரிசையில் எல்லோரையும் அவுஸ்திரேலிய அணி தட்டிக்கொண்டு வருகையில், திடீரென்று இலங்கை அவுஸ்திரேலியாவை இடையில் ஒருதரம் கவிழ்த்துவிடும். இது அவுஸ்திரேலியாவுக்கு அவ்வளவு உவப்பாக இருப்பதில்லை என்பதுடன், இலங்கை அணிமீது ஒரு வகை வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், வெள்ளியன்று நடந்த ஆட்டம் மிக ஆவலாக எதிர்பார்க்கப்பட்டது. அவுஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டப் பலத்தின் முன் இலங்கைப் பந்து வீச்சாளர்கள் எதுவுமே செய்யமுடியவில்லை என்பதுதான் உண்மை. இறுதிவேளையில் வீழ்த்தப்பட்ட மூன்று விக்கெட்டுக்கள் எந்தவித சலனத்தையும் எத்தரப்பிலும் ஏற்படுத்தவில்லை. 319 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியா தோல்வியைத் தழுவும் என்றும் யாரும் எதிர்பார்க்கவும் இல்லை.

அதனை நிரூபிப்பதுபோலவே இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் திரும்பிக்கொண்டிருக்க, சனத்தும் திருப்பி அனுப்பப்பட, நிலைமை மிக மோசமானதொரு நிலைக்குச் சென்று கொண்டிருந்தது. அவுஸ்திரேலியா இருந்த "மிதப்பு" நிலையில், இலங்கை அணி நூறு ஓட்டங்களுக்குள் சுருண்டுவிடுமோ என்ற ஐயம்கூட ஏற்பட்டது உண்மை.

ஆனால், ஒரு தனிமனிதன் இந்த சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தை அவுஸ்திரேலியா VS அரவிந்த என்று மாற்றி விட்டார். அரவிந்தவுக்கு அறிமுகம் தேவையில்லை. இந்த அற்புதமான வீரனின் விளையாட்டு, இந்த ஆட்டத்தின் பரிமாணத்தையே வித்தியாசப்படுத்திக் காட்டிற்று.

திடீரென்று இலங்கை அணியின் தாழ்நிலையை அரவிந்தவினால் எப்படி உயர்த்தமுடிந்தது. எந்த லீயும், எந்த மக்ராவும் அரவிந்தவை அசைக்க முடியவில்லை. அசைந்தது அவுஸ்திரேலிய அணிதான்.

தனது அனுபவம், ஆற்றல், திட சங்கற்பம், ஆவேசம், நிதானம், வைராக்கியம் எல்லாவற்றையும் ஒரு துடுப்பில் கொண்டுவந்து குவித்திருந்தார் அரவிந்த. சங்கக்கார அவருக்குக் கொடுத்த ஆதரவு அபாரமானது. அவரது Out துரதிர்ஷ்டவசமானது. அதேபோன்று சமிந்தவாஸ். அவர் தன் பங்குப் பணியை அருமையாக நிறைவேற்றினார். ஆனால், முரளி தன் துடுப்பாட்டப் பணியை சரிவரச் செய்யவில்லை.

முரளி, தன் துடுப்பாட்டத் திறமையை கொஞ்சம் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று இலங்கையின் முன்னைய வீரர்கள் பலர், பல தடவைகள் அறிவுரை கூறியுள்ளார்கள். வெள்ளியன்று இருந்த நிலையில் முரளியிடம் யாரும் SIX அடிக்கும்படி கேட்கவில்லை. இவரது சில SIX களால் வெல்லப்படக் கூடிய ஆட்டமும் அல்ல அது. இந்த நிலையில் அவர் தனது விக்கெட்டைக் காப்பாற்றிக்கொண்டு, அரவிந்தவுக்கு தோள் கொடுத்துக்கொண்டு, "கௌரவமான"தொரு எண்ணிக்கையை இலக்காகக் கொண்டு செயற்பட்டு இருக்க வேண்டும். மஹேல, ஆர்னல்ட் கூட இலக்குகளை இழந்து சென்றவர்கள்தான். ஆனால், முரளி துடுப்பாட்டம் என்ற வகையில் பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்பதே உண்மை.

இறுதி முடிவு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட வகையில் முடிந்தது. ஆனால், அரவிந்த எதிரணிப் பந்து வீச்சாளர்களுக்கு நல்லதொரு பாடம் படிப்பித்தார். இவரது இந்தப் பாடம் இலங்கை அணிக்கு மட்டுமல்ல, ஏனைய அணிகளுக்கும் ஒரு நம்பிக்கையைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அவுஸ்திரேலியா வென்ற மகிழ்ச்சியில் இருக்கக்கூடும். ஆனால், அரவிந்தவின் அகோரம் அவுஸ்திரேலிய வீரர்கள் அனைவரையும் மீண்டும் தரையில் இறக்கி விட்டிருக்கும் என்பதிலும், "மிதப்பை" பரிசீலனை செய்யவும் வைத்திருக்கும்.

அரவிந்தவிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட பிறகாவது அந்தக் குத்தியெழுப்பி விக்கெட் எடுக்கும் "கலையை" அவுஸ்திரேலியர்கள் ஆராய்வார்களா?



பொண்டிங் - வெற்றிகளால் மகிழ்ச்சி



சனத் - காயம் இல்லாவிட்டால் காப்பாற்றியிருப்பார்!

**நிர்மலன்**

## நினைக்கும் போதே... ஆஹா



பாகிஸ்தானில் வைத்து மடக்கணுமே

2003 உலகக் கிண்ணப் போட்டிகளைத் தொடர்ந்து நல்ல, நல்ல விடயங்கள் நடைபெறும் போலத் தெரிகிறது. அதிலொன்றுதான் இந்தியக் கிரிக்கெட்சபை, பாகிஸ்தானுடன் மீண்டும் கிரிக்கெட் தொடர்களில் விளையாடுவதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருப்பது. ICC யின் பத்து வருட சர்வதேச கிரிக்கெட் அட்டவணையின்படி, இந்தியா அடுத்த மாதம் பாகிஸ்தானுக்குச் செல்ல வேண்டும்.

ஆனால், அனேகமாக இந்தச் சுற்றுப்போட்டி தடைப்படும் சாத்தியமே அதிகம்.

பாகிஸ்தான், இந்தியா இரண்டுக்கும் காஷ்மீர் பிரச்சினை தொடர்பில் மிகுந்த மனக்கசப்பு. அத்துடன் பாரிய அரசியல் பிரச்சினை. ஆனால், 10 வருடகால எல்லைக்குள் இருமுறை இவர்களும், இருமுறை அவர்களும் பரஸ்பரம் இரண்டு நாடுகளுக்கும் சென்றிருக்க வேண்டும்.

இந்தியாவின் பகிஷ்கரிப்புத் தொடருமாயின், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டிகளில், இந்தியா பாதிப்படையும் நிலை ஒன்று உருவாகும்.



இந்தியாவில் வைத்து சுருட்டணுமே

இதேவேளை, ஏற்கனவே பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக் காட்டி நியூசிலாந்து, மேற்கிந்தியா, அவுஸ்திரேலியா முதலிய அணிகள் பாகிஸ்தானுக்கு வர மறுத்துவிட்டால், பாகிஸ்தான் பாரிய நிதி இழப்பையும் எதிர்கொள்ள வேண்டியநிலையும் ஏற்பட்டது.

எனவே, மொத்தத்தில் இருதரப்பு இலாப நட்டங்களையும் இருநாட்டு மற்றும் கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பத்தையும் கருத்திற்கொண்டு, பாகிஸ்தானுக்கான சுற்றுப் போட்டிக்குப் பச்சைக்கொடியை இந்திய அரசு காட்டுமாயின் மிகவும் விரும்பத்தக்கதாகவே இருக்கும். பூனைக்கு மணி கட்டுவது யார்?

ஜோசப் கிருஷ்ணா.

### நேற்றைய சிம்பாப்வே - நியூசிலாந்து ஆட்டத்திலிருந்து...



இது பவுண்டரி அடிக்கும் - புதிய ஸ்ரைல் சிம்பாப்வேயின் இளம் வீரன் டைபு சாகசம்



ரன் அவுட்டான அன்டி பிளவர் வீழ்ந்துகிடக்க, மகிழ்ச்சியில் அஸ்லே

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### சிம்பாப்வே எதிர் நியூசிலாந்து அணி

**சிம்பாப்வே அணி**

| | | |
|---|---|---|
| விஷாட் | C ஸ்ரைறிஸ் b ஹெய்ன்ஸ் | 30 |
| இப்ராஹிம் | b அடம்ஸ் | 00 |
| ஏ. பிளவர் | Run out | 37 |
| ஜீ. பிளவர் | C ஹெய்ன்ஸ் b ஓரம் | 01 |
| விட்டல் | C மக்கல்லம் b ஹெய்ன்ஸ் | 00 |
| டைபூ | LBW b ஹரீஸ் | 53 |
| பிளிக்நட் | Run out | 04 |
| ஸ்ரீக் | N0t out | 72 |
| எர்வின் | Not out | 31 |
| உதிரிகள் | | 24 |
| மொத்தம் 7 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 252 |

**பந்து வீச்சு - நியூசிலாந்து அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பொண்ட் | 10 | 1 | 37 | 0 |
| அடம்ஸ் | 05 | 0 | 54 | 1 |
| ஓரம் | 10 | 4 | 28 | 1 |
| ஹெய்ன்ஸ் | 04 | 0 | 16 | 2 |
| வெட்டோரி | 10 | 0 | 52 | 0 |
| ஹரீஸ் | 10 | 0 | 45 | 1 |

**நியூசிலாந்து அணி**

| | | |
|---|---|---|
| மக்மிலன் | C டைபூ b ஹொண்டோ | 08 |
| பிளெமிங் | LBW b பிளிக்நட் | 46 |
| அஸ்ரல் | Not out | 102 |
| ஸ்ரைறிஸ் | C Sub b பிளிக்நட் | 13 |
| ஹெய்ன்ஸ் | b எர்வின் | 54 |
| ஹரீஸ் | Not out | 14 |
| உதிரிகள் | | 16 |
| 4 விக்கெட்டுக்களை இழந்து (47.2 ஓவர்கள்) | | 253 |

**பந்து வீச்சு - சிம்பாப்வே அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஸ்ரீக் | 10 | 0 | 59 | 0 |
| ஹொண்டோ | 8.2 | 0 | 52 | 1 |
| பிளிக்நட் | 10 | 0 | 41 | 2 |
| ஜீ. பிளவர் | 10 | 0 | 33 | 0 |
| விட்டல் | 03 | 0 | 19 | 0 |
| எர்வின் | 06 | 0 | 44 | 1 |

சிம்பாப்வே அணியை நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

## நாளும் ஒரு வினா

**இது வரை நடந்த 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஒரு அணி எடுத்த அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை யாது?**

**342 ஓட்டங்கள் சிம்பாப்வே எதிர் நமீபியா**

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

இலங்கையின் நம்பர் 01 கம்பனி "பிஸினஸ் ருடே" சஞ்சிகை
(Business Today Magazine).
இலங்கையின் தலைசிறந்த வங்கி- 'குளோபல் பைனான்ஸ், த பாங்கர் சஞ்சிகை'
(Global Finance, The Banker Journal)
எமது மிகப்பரந்த கணனி வலை அமைப்புக்குள் (Comnet) யாழ்ப்பாணமும் இணைந்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அபிவிருத்திக் கூட்டங்களுக்கு ஆளுநரும் வரவேண்டும்!

## நேற்றைய கூட்டத்தில் எம்.பிக்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பாக, இனிவரும் கூட்டங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ள வேண்டும்.

-என, நேற்று யாழ். செயலகத்தில நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களால் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

குடாநாட்டினுடைய அபிவிருத்தியில் மாகாணசபையினுடைய அங்கீகாரங்கள், ஆலோசனைகள் பெறவேண்டியுள்ளது. அத்துடன் திணைக்களங்களின் சேவைகளைப் பெறுவதற்கும் மாகாண சபையையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

குடாநாட்டின் தேவைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக, நடைபெறும் கூட்டங்களுக்கு இவர்கள் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது.

இந்தக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும்போது, திருகோணமலைக்கு கடிதங்களை அனுப்பி அனுமதி பெறுவதில் நீண்டகாலத் தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இந்த காலதாமதங்களைக் குறைப்பதற்காகவும், ஏனைய வசதிகளுக்காகவும் குடாநாட்டினுடைய அபிவிருத்தி தொடர்பாக நடைபெறும் அடுத்த கூட்டத்தில் ஆளுநர், செயலாளர்கள், பிரதம செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ள வேண்டுமென - மாகாணசபையின் பிரதம செயலாளரிடம் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ச)

# அபிவிருத்திக்கான தேவை மதிப்பீடு அரசின் சமாதான செயலகத்துக்கு

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய, உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான, முழுமையான தேவை மதிப்பீட்டு அறிக்கை, அரசின் சமாதான செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் தேவை மதிப்பீட்டுக் குழுக்கள், நேரடியாகச் சென்று தமது மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டிருந்தன. இம் மதிப்பீட்டு அறிக்கைகள் யாழ். செயலகத்துக்குக் கிடைத்தன.

அனைத்து தேவை மதிப்பீட்டுக் குழுக்களினதும் அறிக்கைகளை அடிபபடையாக வைத்து, முழுமையான மாவட்ட தேவை மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட மாவட்ட மட்ட தேவை மதிப்பீட்டு அறிக்கை, தற் போது சமாதான செயலகத்துக்கு பரி சீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. (க)

## எச்.என். டி. ஏ. அங்கீகாரம்

தொழில்நுட்பக் கல்லூரியில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமாவை நிறைவு செய்தவர்களுக்கு, லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவனத்தின் அங்கீகாரம் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்களை நாளையும் நாளை மறுதினமும் ஐ.பி.எம்.எம். பிரதிநிதியான கலாநிதி குமரகுருபரனிடம் தொழில்நுட்பக் கல்லூரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

## 6 போராளிகள்...

பர் திணைக்களம் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டாது என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை நடைபெறும் பிணை மனுவிசாரணையின்போது சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, மனுதாரர்கள் சார்பில் ஆஜராகவுள்ளார்.

## அக்குரஸ்ஸவில்...

பூமிபுத்ர கட்சி 119 வாக்குகளையும் பெற்றன.

இத்தேர்தலில் - ஐ.தே.க. சமர்ப்பித்த வேட்புமனு, நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதால் -அக்கட்சி போட்டியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம்களுக்கு...

கனடிய வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், முஸ்லிம்களின் நாடாளுமன்ற உறுபபினர்கள் குழுவொன்று கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவரைச் சந்தித்து, தனிக்குழுவாக முஸ்லிம் தரப்பை அனுமதிக்குமாறு கோரியது பற்றிக் கருத்துக்கூறுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்திருப்பதாவது, அடுத்தடுத்த பேச்சுக்கள் முக்கியம் வாய்ந்தவையாக அமையவுள்ளன. அரசும் புலிகளும் முக்கிய விடயங்கள் பற்றி இவற்றில் பேசவுள்ளனர். பேச்சுக்கள் முன்னேற்றகரமானதாக அமையும் என்பதில் நோர்வே நம்பிக்கை கொண்டிருக்கிறது என்றார்.

# தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவை இரண்டாகப் பிரிப்பதற்கு யோசனை

தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவை இரண்டாகப் பிரித்து புதிய பிரதேச செயலர் பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் மற்றும் வட - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆகியோரின் கவனத்துக்கு மேற்படி விடயம் கொண்டு வரப்பட்டது.

பரப்பளவில் மிகப்பெரிய பிரதேசசெயலர் பிரிவாகக் காணப்படும் தென்மராட்சியை, இரண்டாகப் பிரிப்பதன் மூலம் புதிய பிரதேசசெயலர் பிரிவை, கொடிகாமத்தை உள்ளடக்கியதாக உருவாக்க முடியும் என்றும் ஆலோசனை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

# கைதிகள் விவகாரம் தொடர்பாக நீதித்துறையை ரணில் சந்திப்பார்

உண்ணாவிரதமிருக்கும் களுத்துறை சிறைக்கைதிகள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக, பிரதமர் ரணில் அடுத்த சில தினங்களுக்குள் நீதித்துறை உயரதிகாரிகளுடன் பேசவிருப்பதாக அரச சமாதானச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

களுத்துறை சிறைச்சாலைக்கு சென்று, தமிழ் அரசியற் கைதிகளைச் சந்தித்துக் கதைத்த சமாதானச் செயலகப்பணிப்பாளர் பேனாட் குணதிலக - இது தொடர்பான அறிக்கையொன்றை பிரதமருக்கு சமர்ப்பித்தார். அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே பிரதமர், நீதித்துறை உயரதிகாரிகளுடன் பேசவிருப்பதாகத் தெரியவருகின்றது.

தமது வழக்குகளை வடக்கு-கிழக்கில் உள்ள மேல் நீதிமன்றங்களுக்கு மாற்றுதல், தம்மை வடக்கு-கிழக்கு சிறைச்சாலைகளுக்கு மாற்றுதல், வெலிக்கடையில் அமைக்கப்பட்ட விசேட மேல் நீதிமன்றத்துக்கு நிரந்தர நீதிபதி ஒருவரை நியமித்தல் ஆகிய கோரிக்கைகளை கைதிகள் முன்வைத்ததாகவும் பேனாட் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## பல கோரிக்கைகளை...

வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்து அரச ஊழியர்களுக்கும், வெள்ள நிவாரணமாக அரசு ஏற்றுக் கொண்டதற்கு அமைவாக வெள்ள நிவாரண நிதி வழங்க வேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டபடி பாடசாலைகள் வணக்கஸ்தலங்கள், பொதுஇடங்கள் மற்றும் தனியார் குடிமனைகளில் தங்கியுள்ள படையினரின் முகாம்கள், காவலரண்கள் என்பனவற்றை அகற்ற வேண்டும்.

பலாலி ஆசிரியர் கலாசாலை உட்பட உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆசிரியசேவையில் வகுப்பு 1 இற்கு பதவி உயர்வு பெற 50 வயதை அடையவேண்டும் என்ற நிபந்தனையை நீக்குவது உட்பட, அரசின அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாற்றங்களையும் உள்ளடக்கி, புள்ளி அடிப்படையில் ஆசிரிய பதவி உயர்வுகளை வழங்கும் கால எல்லையை, 31.12.2003 வரை நீடித்து பதவி உயர்வு வழங்க வேண்டும். கல்வி அமைச்சினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளில் இன்றுவரை நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

க.பொ.த.உயர்தர புள்ளி அடிப்படையில் 1000 பேருக்கு நியமனம் உட்பட - உடற்கல்வி, சங்கீதம், நடனம், சித்திரம், கடல்வளம் உட்பட மிகுதி பட்டதாரி ஆசிரிய நியமனங்களை உடன் வழங்கவேண்டும்.

-ஆகிய கோரிக்கைகளின் அடிப்படையில் - நாளை மறுதினம் காலை 10 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரியிருந்து ஆரம்பிக்கப் படவுள்ள பேரணியில், சகல ஆசிரியர்களும் கலந்துகொண்டு தமது ஒட்டுமொத்தமான ஆதரவை வழங்கும்படி - சங்கத்தின் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.

பணிநிலை வெற்றிடம்
ஆயப்பகுதி
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயப்பகுதியில் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

ஆயஇளநிலை அதிகாரி (ஆண்) | கணக்காய்வாளர் (ஆண்)

பயிற்சிக்காலச் சம்பளம் 6500/=

தகைமைகள்:
1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமானி அல்லது தொழில் நிர்வாகமானி அல்லது பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

2. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

ஆயஅலுவலர் (ஆண்)

தகைமைகள்:
1. க.பொ.த (உ.த) இல் வர்த்தகம் அல்லது கணிதப் பிரிவில் 3 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சமையலாளர் (ஆண்) முன் அனுபவம் விரும்பத்தக்கது, சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

பொருத்தமானவர்கள் 14.03.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 1.00மணி வரை சுயமாகத் தயாரிக்கப்பட்ட வேண்டுகைகள் மற்றும் சான்றிதழ்களுடன் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்திற்கு சமூகம் தரவும்.

ஆயப்பகுதி, நடுவப்பணியகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள், கிளிநொச்சி.
(273)

அறிவித்தல்

தென் பகுதியிலிருந்து எமது பகுதிக்குள் வியாபார நோக்கம் கருதி சிகரட் வகைகள் கொண்டு வருவதற்கு 2003 .03 .15 ஆம் நாளிலிருந்து முகவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

பணிப்பாளர்.
ஆயப்பகுதி.
நிதித்துறை.
தமிழீழ விடுதலைப் புலிகள்.
(273)



குட்வில் வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே இந்த அரிய வாய்ப்பு

யாழ். வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது ஊழியர்கள் விஷேட இலவச சேவைக்காக யாழ். நகரில் மார்ச் 10 முதல் 25 வரை கீழ்காணும் இடங்களில்..... (06 மாதத்திற்கொருமுறை இந்த சேவை வழங்கப்படும்)

| | | |
|---|---|---|
| எஸ்.திருச்செல்வம் டிஸ்பென்சரி ஒழுங்கை, உரும்பிராய். | சாந்தசோதி பிள்ளையார் கோவிலடி, இணுவில். | ப.அருட்பிரகாசம் அச்சுவேலி. |

GUDWIL

மேலதிக விபரங்களுக்கு :- 55, துட்டுகெமுனு வீதி, பாமன்கடை, தெஹிவளை.
T.P - 818415 - 074-208101 -2 - 0777 - 351695 Fax - 818416
E mail - gudwil @ eureka. lk
(சி - 666)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.